ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1--12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
☞நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. ஈரோடு, ஆங்கிரஸ-ஞு புரட்டாசி-மீ 31-உ (16—10—1932) மலர் 25.

நீங்கள் விரும்புவதென்ன?

அறிவுள்ளவர்களாகவும், மூட நம்பிக்கையற்றவர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேரிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி.எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் தெளியும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழி முந்தியதா, முட்டை முந்தியதா? என்ற சந்தேகங்களுக்குத் தகுந்த விடைகளுடன் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை 4-அணா,

தனிப்பிரதி வேணடுவோர் 5-அணா தபால்தலைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக் கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

"ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

உங்கள்
கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்
பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமையொழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம்ஹு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

"குடி அரசு"
கிடைக்குமிடங்கள்.

வேலூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை
கல்லுக்கட்டி.

சேலம்.
சிவசுப்ரமணியம், வீரராகவ செட்டி தெரு, அரிசிபாளயம்.

கொளும்பு.
சிவன் கோவில் மேற்குமடம்
பருத்தித்துரை.

புதுவை.
திருவள்ளுவர் வாசிப்புசாலை
4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சோடாபாக்டரி
ராஜவீதி.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய
மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.
என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)
கிடைக்குமிடம்:- "குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

தஞ்சையில் கூடிய 12-வது பிராமணரல்லாதார் மகாநாட்டுத்தலைவர்
பொப்பிலி மகாராஜா
அவர்கள் தலைமைப்பேருரை.

8—10—32 ந்தேதி தஞ்சை பார்ப்பனரல்லாத மகாநாட்டில் தலைமை வகித்த பொப்பிலி மகாராஜா செய்த பிரசங்கத்தின் விபரமாவது:—

வரவேற்புக்கழகத் தலைவர்களேபிரதிநிதிகளே! இந்த மகாநாட்டிற்குத் தலைவனாக என்னைத்தெரிந்தெடுத்து கௌரவித்ததுபற்றிநான் உங்களுக்குப்பெரிதும் நன்றி செலுத்துகிறேன். இந்த கௌரவத்தை நீங்கள் எனக்கு வழங்கியிருக்கின்றீர்களாயினும், உங்களுடைய பேரன்பும் பெருந்தகைமையுமே எனக்கு இப்பதவியை யளிக்கும்படி தூண்டியதென நான் உணருகின்றேன். ஏனெனில் இப்பெருங்குழாத்துள் என்னினும் சிறப்புற நான் தற்போது வகிக்கும் பதவியைத்திறம்பட வகிக்கத்தக்க பலர் குழுமி யிருக்கின்றார்கள். நான் வணக்கத்துடன் நன்றியுடனும் ஒருவிஷயங்கூற விரும்புகிறேன். என்மீது நீங்கள் சுமத்தியிருக்கும் கடமையை என்மனசாக்ஷிக்கு விரோதமின்றி என்னால் இயன்றவளவு நடத்துவிக்க முயற்சிக்கின்றேன். நீங்களனைவரும் எனக்குப்பக்கபலமாயிருந்து ஒத்துழைத்து இந்தத் தென்னிந்திய நலஉரிமைச்சங்கத்தின் 12 வது ஆண்டுக்கூட்டம் இனிது நடைபெறும்படி செய்வீர்களெனக் கருதுகின்றேன்.

காலஞ்சென்ற தலைவர்கள்.

நாம் சென்ற முறை கூடியதற்குப் பிறகு, நம்முடைய நண்பர்கள்பலரை இழந்து விட்டோம். காலஞ் சென்ற பெரியோர்களின் முன்மாதிரியை, இயன்றவரை, நமக்குத்தெரிந்த மட்டும் பின்பற்ற வேண்டும்,

இந்தியாவும் பொருளாதாரமும்

நாம் ஒரு பெரும் இயக்கம் நடைபெறும் காலத்தில் கூடுகின்றோம். அது நமது இயக்கத்திற்கு மட்டுமன்றி, இந்தியாவிற்கும், நாகரிக உலகத்திற்கே மிகமகத்தானதாகும். மக்கள் இனிது உலகில் வாழவேண்டுமென்னும் நோக்கத்துடன் மகாயுத்தம் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. ஆனால் மகாயுத்தத்திற்குப்பிறகு மக்கள் சமாதான முன்னேற்றமும் திருப்தியும் பாது காப்பும் அடைந்திருக்கவேண்டும். தேசிய நோக்கங்களும் போட்டிகளும் இன்னும் இருந்துகொண்டுதானிருக்கின்றன.

அநேக ஆண்டுகளாகத் தோன்றியிராத கடுமையான பிரச்னைகள் ஐரோப்பிய நாடுகளிலுள்ள அரசியல் வாதிகளின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கின்றன. பொருளாதாரத் துரையில் இந்தியா வெகு சிக்கலான முறையிலிருந்து வருவதனால் உலகப் பொருளாதாரப் பிரச்னைகள் சம்மந்தமாகவும், இதர பிரச்னைகள் சம்மந்தமாகவும் நாம் நம் கவனத்தைச் செலுத்தக்கூடவில்லை.

நம் கட்சிக்கோள்கைகள்

சென்ற சிலவருஷங்களாக இந்தியா ஒருவகைப் புத்துணர்ச்சிபெற்றிருக்கின்றது. அந்தப்புத்துணர்ச்சி உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் பரவியிருக்கின்ற தென்று உறுதியாகக்கூறலாம். இப்பண்டைய மக்கள் புத்துணர்ச்சி பெறுவதற்குக்காரணங்கள் பலஉண்டு. ருஷியஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானியருக்கு வெற்றி கிடைத்ததும், விடுதலைக்காக நடைபெற்ற மகாயுத்தத்தில் இந்தியா கொண்டிருந்த பெரும் பங்கும், சுயாட்சி நாடுகளின் பிரதிநிதிகள் கூடிய சர்வதேச சங்கத்தில் இந்தியாவும் ஒரு அங்கம்பெற்றதும், ஜப்பானும் இந்தியாவிலும் ஏற்பட்டிருக்கும் கைதொழில் முன்னேற்றமும், இதர கீழ் தேசத்து நாடுகளும் ஆசிய நாடுகளின் அரசியல் சிந்தனையில் பெரும் புரட்சியையுண்டுபண்ணி விட்டன. இன்றுதம்மை உயர்ந்தவர்களெனக் கூறிக்கொள்ளும் இதரநாட்டாரை, நமது உதவியையே துணைக்கொண்டு நம்பிறப்புரிமையை வழங்குமாறு கேட்கின்றோம்.

அரசியல் முன்னேற்றத்திற்கான முயற்சி நடைபெறும்போது சமுதாய முன்னேற்றத்திற்கான முயற்சியுங் கூட நடைபெறவேண்டும் என்னும் உண்மையில், நாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருக் கின்றோம். "அரசியல் நீதியும் சமூதாய நீதியுமே" நமதுகட்சியின் சமுதாயக்கொள்கையாயிருந்து வந்திருக்கின்றது. இன்று நாம் நம்மைப்பாராட்டிக்கொள்ளத்தக்க நிலை ஏற்பட்டிருக்கின்றது. நாம் அன்றுமுதல் இன்றுவரை எந்தக்கொள்கைக்காகப் பாடுபட்டு வந்தோமோ அக்கொள்கை முழுதும் கைவரப்பெற்றோம். நமது அரசியல் எதிரிகள் இறுதியில் நமதுவழிக்கே திரும்பிவிட்டார்கள். நம் கட்சியைத் தோற்றுவித்த காலத்திலேயே நம் தலைவர்கள் நம்கட்சியின் கொள்கையை வகுத்திருப்பதின் நேர்மையை சமீபகாலத்திய சம்பவங்கள் மெய்ப்பிக்கின்றன. மற்றொரு விஷயத்திலும் நாம் உறுதியாகவே இருந்துவருகின்றோம்.

புறம்பான கோள்கைகள்

நாம், அரசியல் அமைப்பின் நெறி தவறாது ஒழுகவேண்டுமென்னும் கொள்கையை மேற்கொண்டிருக்கின்றோம் எதிர்ப்பினாலும் போலி எதேச்சையினாலும் முன்னேற முடியுமென நாம் நம்பவில்லை.

சட்டமறுப்பியக்கத்தினால் நாட்டின் பொருளாதார நிலைசிதைந்தது மட்டுமன்றி, பயனளிக்கத்தக்க முயற்சிகளெல்லாம் பாழாகிவிட்டன. இந்த இயக்கமானது மேலும் நடைபெறுமேயானால் நாடு அந்தகாரத்துள் மூழ்கித் தவிக்குமென்பது திண்ணம். இந்த அறிவற்ற முறைகளால் மனதைலக்ஷயிழுப்பிரிக்க முயன்றவர்கள் இப்போது களைப்புற்றிருக்கின்றார்கள், இப்போதுள்ள அரசியல் வாதிகள் என்ன செய்யவேண்டுமென்றால் அவர்களனைவரையும் ஒன்றுபடுத்த வேண்டும். நியாயநெறியில் பரஸ்பர நல்லுணர்ச்சியைக் கொண்டு அவர்களை நடத்தவேண்டும். இந்த ஒரே வழியைக்கொண்டுதான் இந்தியா தான் கொண்டிருந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம். ஆகவே நாம் மீண்டும் ஒரு முறை வற்புறுத்திக்கூறவதென்னவென்றால், நாம் நமது நெறிதவறாது அதைப்பின்பற்றியே ஒழுகவேண்டும். எனவேநமது கொள்கைகளைக் காப்பாற்றவேண்டுமென மீண்டும் வற்புறுத்திக்கூறவேண்டிய அவசியமே கிடையாது. இக்கொள்கைள் நமது பெருந்தலைவர்களால் வகுக்கப்பட்டன. சந்தர்ப்பங்கள் எத்தகைய நிலையையுண்டுபண்ணின போதிலுங்கூட, அவர்கள் வகுத்தநெறியினின்று நாம்பிறழலாகாது. காரியசித்தி பெறுவதில் நமது அரசியல் எதிரிகளைவிட நாம் சீக்கிரத்தில் காரிய சித்திபெறுவோம்என்பது உறுதி.

போறுப்பற்றமாகாண ஆட்சி வேண்டற்க.

இப்போது பெரும் அரசியல் மாறுதல் ஏற்படக்கூடிய தருவாயிலிருக்கின்றோம். ஐக்கிய அரசியல் அமைப்பாக மாறுமென்று தெளிவாகத்தெரிகின்றது. இந்த அரசியல் அமைப்புப்படி இந்திய சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் பொது நோக்குடன் ஒன்று படவேண்டும். இந்திய அரசியலிலுள்ளபல வகை முரண்பாடுகளுக்கும் தொல்லைகளுக்கும் ஐக்கிய இந்திய அரசியல் அமைப்புத்தான் ஏற்ற பரிகாரம் என்பதுபற்றி சிறிதும் சந்தேகமே கிடையாதெனினும், அதை நடைமுறையில் அமுல் நடத்துகின்ற போது பல தொல்லைகள் கிளம்பக்கூடுமெனத்தெரிகின்றது.

இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் உடனே மாகாண சுயாட்சி வழங்கி விடுவதாகசர்க்கார் கூறினார்கள். ஆனால் அதை இந்தியப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக மறுத்து விட்டனர். ஜஸ்டிஸ் கட்சியங்கத்தினர் என்ற முறையில், மத்திய சர்க்காரில் பொறுப்பற்ற மாகாணசுயாட்சி வழங்கப்படுமேயானால், அதைப்பிறர் போலவே நானும் ஏற்றுக்கொள்ள முடியாதெனக் கூறியிருக்கின்றேன். மத்தியப் பொறுப்பாட்சியற்ற மாகாண சுயாட்சி என்னும் சொற்களே ஒன்றிற்கொன்று முரண்பட்டனவாகும். இத்தகைய திட்டம் இனிது மத்தியப் பொறுப்பாட்சியற்ற மாகாண சுயாட்சியை இந்தியா ஏற்றுக்கொள்ள முடியாதென இம்மகாநாட்டுத் தலைவர் என்னும் முறையில் நான் மீண்டும் கூறுவதை நீங்கள் ஆதரிப்பீர்கள் எனக் கருதுகின்றேன். பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைக்கவேண்டுமென்னும் விருப்பமுடைய, ஒரு அரசியல் நிர்மாணமுடைய, நம் கட்சியுங்கூட, இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளவோ, இத்திட்டத்தின்படி அமுல் நடத்தவோ ஒப்புக்கொள்ள முடியாது. மத்தியப் பொருப்பாட்சி எனக் கூறுமிடத்து, இந்தியாவின் நலன்களுக்கேற்றவாறும், அத்திட்டம் இனிது அமுல் நடத்தப்படுதற்கேற்றவாறும், படிப்படியான பாதுகாப்புகளுடன் அமைப்பது என்னும் பொருள் கொண்டே ஈண்டு கூறுகின்றோம்.

வகுப்புப்பிரச்சினை தீர்ப்பு.

சீர்திருத்தத் திட்டம் சம்பந்தமாகச் சீக்கிரம் ஒரு முடிவு ஏற்படுத்துவதற்குப் பெருந்தடையாயிருந்தது எதுவென்றால், இந்தியாவிலுள்ள பல சாதியாரும் தம் வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக எவ்வித சமரசமான முடிவும் செய்து கொள்ள இயலாதிருந்தது தான். இந்தக்கொடிய நிலைக்குக் காரணம் காங்கிரஸ் பிரதிநிதிகள் பிடிவாதமாயிருந்ததும், அதுபற்றி மகாநாட்டிற் கலந்து கொள்ள முஸ்லீம்கள் மறுத்ததுந்தான் என்று நான் கூறவேண்டியிருக்கின்றது. நம் நாட்டினின்று லண்டனுக்குச் சென்ற நாங்கள், ஒருவித ஒப்பந்தத்திற்கும் வர இயலாமற் போனது பெரிதும் வருந்தத்தக்க விஷயமேயாகும். இதே கஷ்டம் ஆலோசனைக் கமிட்டியிலுந்தோன்றி அம்முயற்சியையும் கெடுத்தது. இந்த நிலைமையிலேதான், வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றிருந்த இந்தியப் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கிணங்கியும், ஆலோசனைக்கமிட்டியாரின் வேண்டுகோளுக் கிணங்கியும், கடுமையானதும், பொறுப்புள்ளதும், வருத்த மூட்டத்தக்கதுமான வகுப்புப் பிரச்சினைக்குத் தீர்ப்பளிப்பதாக பிரிட்டிஷ் சர்க்கார் ஒத்துக் கொண்டனர். அத்தீர்ப்பைச்சென்ற ஆகஸ்டு 16-தேதி பிரதம மந்திரி பிரகடனம் செய்தார். பிரதம மந்திரியின் இத்தீர்ப்பு, எல்லா வகுப்பாருக்கும் திருப்தியளிக்காதென எனக்குத் தெரியும். இத்தீர்ப்பைக் கண்டிக்கும்போது ஒரு விஷயத்தை மனத்திற்பதித்துக் கொள்ளவேண்டும். சம்மதப்பட்ட வகுப்பார்கள் தமக்குள்ளாகவே ஒருவித ஒப்பந்தத்திற்கு வந்து, பிரதம மந்திரியின் தீர்ப்பில்

அவர்கள் சம்பந்தமாகக் குறிப்பிட்டுள்ள பகுதிக்குப் பதிலாக அவ்வொப்பந்தத்தை யமைத்துக்கொள்ளலாமெனக் குறிப்பிடப்பட்டிருப்பது ஞாபகத்திலிருக்கவேண்டிய விஷயமாகும். அன்றியும் இன்னும் 10 வருஷங்களுக்குப் பிறகு இத்திட்டம் மாற்றியமைக்கப்படும் என்றும் அதில் குறிப்பிட்டிருக்கிறது. இப்பிரச்சினையைக் குறித்து விவாதம் நடைபெறும்போது, ஒரு நிலையிலே, முஸ்லீம்கள்கூட தனித்தொகுதியைக் குறித்து வற்புறுத்தவில்லை. இதர வகுப்பாரும் அந்த அரசியல் ஞாபகத்துடனும் பெருந்தன்மையுடனும் நடந்து கொண்டிருப்பார்களானால்சில மாதங்களுக்குப் பிறகு ஏற்பட்ட நிலை ஒருபோதும் ஏற்பட்டிருக்காது. வகுப்புத்தொகுதிகள் ஜனநாயக தத்துவத்திற்கு முரண்பட்டனவென்பது உண்மைதான். ஆனால் அதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் உண்மையிலேயே தாம் பாதுகாப்புடனிருப்பதாகக் கருதுவார்களானால்தான், அது எத்தகைய சிறந்தமுறையில் வகுக்கப்பட்ட அரசியல் திட்டமாயினும், இனிது அமுல் நடத்தப்படக்கூடும். பல படிகளில் ஒன்றாகிய தற்போதைய நிலையில், அரசியல் ஆதிக்கம் பொது ஜனங்கள் வசம் ஒப்புவிக்கப்படும் இச்சமயத்தில், இந்தியாவிலுள்ள பற்பல வகுப்பினரும் தத்தமக்குப் போதுமானவளவு பயன்படத்தக்க பாதுகாப்புகள் வழங்கப்படவேண்டுமெனக் கோருவது இயற்கையேயாகும். அடிக்கடிப் பூசல்கள் ஏற்படுவதனால் நாட்டின் நலன் முன்னேற்றம் எய்த முடியாதெனினும் உண்மையை அனுபவ அரசியல்வாதிகளாகிய நாம் உணரவேண்டியிருக்கின்றது. நாம் கட்டுப்பாடான முறையில் வேலை செய்து சிறுபான்மையோரின் அச்சங்கள் ஆதாரமற்றனவென்று மெய்ப்பிக்க வேண்டும். இந்நிலையிலே நாம் என்னதான்விவாதித்தாலும், அவர்கள் திருப்தியடையமாட்டார்கள். பரஸ்பர நம்பிக்கையினாலும் நல்லுறவினாலும் நாம் எவற்றை எல்லாம் சாதிக்கக்கூடுமென்பதை பூனா ஒப்பந்தம் மெய்ப்பித்துவிட்டது. நம் மாகாணத்தில் மற்றொரு சிறந்த உதாரணமிருக்கின்றது. இம்மாகாணத்திலுள்ள பார்ப்பனரல்லாதார் 1919-ம் வருஷம் தனித்தொகுதி கோரினவர்கள் பிற்பாடு கூட்டுத்தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படவேண்டுமென 10 வருஷங்களுக்குப் பிறகு கூறினர். இம்முறையை ஏற்றுக்கொள்வதாகத்தாமாகவே உரைத்தனர்.

தாழ்த்தப்பட்டவர்கள்.

இதினின்று தாழ்த்தப்பட்டோர் பிரச்சினை கிளம்புகின்றது. அவர்களை இன்னும் தாழ்த்தப்பட்டவர்களென அழைப்பது வருந்தத்தக்கதே. நம் கட்சி சென்ற 15 ஆண்டுகளாக அவர்களுக்காக அரும்பாடுபட்டிருக்கின்றது. காலஞ்சென்ற சர். தியாகராய செட்டியாரும், டாக்டர் டி. எம். நாயரும் கூட்டிய எழும்பூர் ஏரிக்கூட்டத்தில் நமது இயக்கத்தின் தீரரான காலஞ்சென்ற டாக்டர் டி. எம். நாயர் "தாழ்த்தப்பட்டோர் நலன்களே நமது நலன்கள்; அவர்களின் நேர்மையான உரிமைகள் நம்முடைய நேர்மையான உரிமைகளாகக்கருதப்படவேண்டும். அவர்கள் அரசியல் முன்னேற்றமே இந்தியாவின் அரசியல்முன்னேற்றத்திற்கடிப்படை; கொடுமைப்படுத்தப்பட்டிருப்போரின் நன்மைகளே ஜஸ்டிஸ் கட்சியின் நன்மைகள்."

என கம்பீரமாக எடுத்துக்கூறியிருப்பதை நான் உங்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன். இச்சீரிய நோக்கங்களைக் கொண்டே ஜஸ்டிஸ் கட்சி பாடுபட்டு வந்திருக்கின்றது. பல்லாண்டுகளாக அடிமைத்தனத்தில் மூழ்கியிருந்து வந்த அவர்களது தலைவர்கள் அப்போது வெளிப்படவில்லை. நாம் அவர்களுக்கு வெகுவாக உதவி செய்கின்றோம்; எனினும் இன்னும் செய்யப்பட வேண்டுவன பல உள.

சுயமரியாதை இயக்கம்.

சில வருடங்களாக நடைபெற்று வருவதும் பொது ஜனங்களின் கவனத்திற்குரியதுமான இயக்கத்தைக் குறித்து இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது தென்னிந்தியாவிலுள்ள இளைஞர் சங்கத்தைக் குறித்தும் சுயமரியாதை இயக்கத்தைக்குறித்தும் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். இந்த இயக்கங்களைச் சிலர் வெகுவாகக் கண்டிக்கின்றனர். இந்த இயக்கங்களின் தத்துவங்களைச் சரிவர உணராததினால்தான் தவறான முறையில் அக்கண்டனங்கள் கிளம்பின எனக்கருதுகின்றேன். நான் தெரிந்துகொண்டவரையில் சுயமரியாதை இயக்கம் சிறந்த நோக்கங்களைக் கொண்டது. இதுவரை இருந்ததைவிட இந்து மதத்தை மகத்தானதாக்கிப் பொலிவுறச்செய்வதற்கும் பண்டைக்காலக் கொடுமை காரணமாகத் தோன்றிய ஆபாசங்களையகற்றுவதற்கும், நம்மனைவரையும் ஒன்று படுத்தி உலகத்திலுள்ள புராதன சிறந்த மதமான இந்து மதத்தினர்களனைவரும் சகோதரர்கள் என்னும் உணர்ச்சியை ஊட்டவுமே இந்த இயக்கம் தோன்றியிருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட வகுப்பார் தம் சமரசத்தன்மை காரணமாக அல்லற்படுவதைப்பாரீர், என எந்த அன்னியனும் இந்து மதத்தை இழித்துக் கூற இடங்கொடுக்கலாகாது. முதலாவது மாகாண சுயமரியாதை மகாநாடு செங்கற்பட்டில் நடைபெற்றது. அதை எனது அருமை நண்பரும், அப்போது ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக்கமிட்டித் தலைவராகவுமிருந்து வந்த கனம் பி. டி. ராஜன் திறந்து வைத்தார். இதினின்று ஜஸ்டிஸ் கட்சிக்கும் இந்த சீர்திருத்தக்காரர்களான சுயமரியாதைக்காரர்களுக்குமுள்ள சம்பந்தம் தெளிவாகின்றது. பேருக்கவ்காரணமாகச் சில இளைஞர்கள் இந்துமத வரம்பு கடந்து செல்வார்களானால், இந்த இயக்கத்தையே நாம் குறைகூறக்கூடாது. இந்த இயக்கத்தின் உண்மைப்பொருளையும், சிறந்த கருத்துகளையும் தெளிவாக உணர்ந்துகொண்ட கல்விமான்கள் இந்த இயக்கக்காரர்களைக் கண்டிக்கமாட்டார்கள். வாழ்க்கையின் சமுதாய இயலிலேயே அவர்களுடைய வேலைகள் நடைபெறுகின்றன. எல்லா மதங்களிலும் அவ்வப்போது சீர்திருத்த இயக்கங்கள் தோன்றவேண்டியதுதான். இந்த இயக்கங்கள் மதங்களின் பண்டைப் பொலிவைப் புகுத்தி எல்லா வகுப்பாரும் ஏற்றுக்கொள்ளத்தக்கவாது செய்கின்றன. சமீபத்தில் பீஹார், ஓரிஸாவில் ஒரு அரசியல் ஸ்தாபனத்தைத் திறந்துவைத்தவரும் வைதீகர்களின் வீரருமான தர்பங்கா மகாராஜா அந்த ஸ்தாபனத்தைத் திறந்து வைக்கும்போது "இந்நாடு எந்த முறையிலாவது முன்னேற்றமடையவேண்டுமானால், சாதிப்பாகுபாடுகள் அறவே ஒழியவேண்டும்" எனக்கூறியிருக்கின்றார்.

இந்து மதம் அழிவது ஏன்?

ஒரு சமூகமானது சாதிக்கொடுமையின் காரணமாகவும், வழக்கக்கொடுமையின் காரணமாகவும், பிளவுபட்டு, அமைப்பிழந்து வாழுமேயானால், அரசியல் வாழ்க்கையில் அது வெற்றியுற முடியாதென்னும் உண்மையை இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள இதர அரசியல் இயக்கங்களைப் போலவே, ஜஸ்டிஸ் கட்சியும் வற்புறுத்திக்கூறுகின்றது. தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினை இப்போது மிக முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றாயிருந்து வருகின்றது. பொதுக்கிணறுகளிலும் பொதுவான இந்துக்கள் ஆலயங்களிலும் அவர்கள் இந்துக்களாய் இருந்தும் அவர்களை அனுமதியாதிருப்பதனால், அவர்கள் தம் நிலைமைப்பற்றி வெகுவாக வெறுப்படைந்து இந்து மதத்தில் நம்பிக்கை இழந்து வருகின்றார்கள். கடவுளின் ஆலயத்தில் அவர்கள் நுழையாதிருக்கவும்; சமுதாய உரிமைகள் வழங்காதிருக்கவும் தம்மாலானவரை முயற்சிக்கின்றவர்கள் தான், அவர்களை அரசியற்றுறையில் மார்புறத் தழுவுவோர் என்பது மிக விசித்திரமான விஷயமன்றோ? இந்த துரதிர்ஷ்ட நிலையிலுள்ள இந்துக்களுக்கு அதாவது இதுவரை ஆலயப்பிரவேச உரிமையற்றிருந்த இந்துக்களுக்கு ஆலயப்பிரவேசமளிக்கவும், ஒடுக்கப்பட்டாருக்கிருந்துவரும் குறைபாடுகளையகற்றவும் நம் கட்சி கங்கணம் கட்டியிருக்கின்றது.

சுதேசி.

நமது கட்சியின் திட்டத்தில் பொருளாதார முதற்கொள்கையாக சுதேசியமே விளங்கி வந்திருக்கின்றது. தேச பக்தியுள்ள எல்லா இந்தியர்களும் உள்ளூர் கைத்தொழில்களுக்காதரவளித்து போதியவளவு பொருளாதார நிலையுடையதாக இந்தியாவை ஆக்கவேண்டியது அவசியமாகும். இங்கிலாந்திலே பிரிட்டிஷ் சாமான்களையே வாங்குங்கள் என்னும் பாட்டே பாடப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்திலே எல்லாருடைய நலத்திற்கும் நம் கட்சி பாடுபடுகின்றதென்னும் முறையில், இனிமேல் நாம் தொழிலாளர்களின் கொடுமைகளை நீக்கவும் வெகுவாக முயற்சிக்க வேண்டுமெனக் கூறுவேன். சில சுயநல வாதிகள் தொழிலாளர்களைத் தீயநெறியில் செலுத்தி தொழிலாளர் இயக்கத்தினின்றும் அவர்களைப் பிரித்து விடுகின்றார்கள். இது பற்றி நாம் எச்சரிக்கையோடிருக்க வேண்டியிருக்கின்றது.

எதிர்கால அமைப்பு.

இனிநான் கூறப்போவது என் சொற்பொழிவின் முக்கியமான அம்சம். இன்னும் ஒரு வருஷத்தில் பெரும் அரசியல் மாறுதல்களுக்குட்படப்போகின்றோம். அதாவது பொதுத்தேர்தலில் ஈடுபட்டிருப்போம். இத்தகைய தேர்தல் இந்தியாவில் நடைபெற்றதே கிடையாது. பல காரணங்களைப்பற்றி அத்தேர்தல் மிக முக்கியமானதாகும். அரசியல் காரியங்களுக்காக முதன் முதலாகப் பெரும் தேர்தல் தொகுதி அமைக்கப்படுகின்றது. இதுவரை இத்தொகுதியாளர்கள் தம் கடமைகளை யாற்றப்பழகியவர்களன்று. எனவே, இந்நாடு செம்மையாய் ஆளப்படவேண்டுமென்பதில் அக்கறை கொண்டவர்கள் நமது அரசியல் கட்சியாரைப்போல் வேறெக்கட்சியாருமில்லை. ஆகையால் வாக்காளர்கள் தம் கடமைகளை நாட்டின் நலன் கருதி ஆற்றத்தக்கவாறு நாம் அவர்களுக்குப் போதிக்கவேண்டியதற்கான குறைகளைக் கையாள வேண்டியது அவசியமாகும். நமது கட்சியைச் செம்மையாய் அமைத்தாலல்லது, நமது பத்திரிகைகளைத் தக்க பொருளாதார நிலையில் வைத்தாலல்லது, வெளியூர்களில் தீவிரமான பிரசாரம் செய்தாலல்லது நமது நோக்கம் கைவரப்பெறமுடியாது. நாம் தற்போதுள்ள நிலையிலே, வெகுவாகப்பெருகியிருக்கும் வாக்காளர்களைத் தெரிந்துகொள்வதும், இருநூற்றுக்கதிகப்பட்ட ஸ்தானங்களுக்குத் தக்கவர்களைத் தேர்ந்தெடுப்பதும் இலேசான வேலையல்ல. இதற்குத் தக்க கட்சியமைப்பிருக்கவேண்டும். அன்றியும் சமீபத்தில் ஏற்படக்கூடியபலவகைப் பிரச்சினைகளுக்கும் முடிவுகாண கட்சிக்குப்போதிய நிதிவேண்டும். நாம் நமது பலத்தைமட்டும் துணைகொண்டிருக்கக்கூடாது. ஒவ்வொரு ஜில்லாவிலும் மகாநாடுகள் கூட்டி திட்டங்கள் வகுத்து அதன்படி நடக்கவேண்டியது அவசியமாகும். அத்திட்டம் பொதுஜன நன்மையை கொண்டதாயிருக்கவேண்டும். அம்முறையில் நாம் தொண்டாற்றினால்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

ஆசையும், பயமும்.

மக்களை அடிமையாக்கியவைகள்.

[சாமி. சிதம்பரனார்]

மக்களை அடிமையாக்கியது பயமேயாகும். பயமற்ற மனிதன் அதாவது நெஞ்சாண்மையுள்ள ஒரு ஆண்மகனே அல்லது பெண்மகளோ எந்தச் செயலிலும் வெற்றிபெறுவது திண்ணம். இத்தகையவர்களின் வாழ்க்கையில் தோல்வி என்பதே அறிதாகும்.

ஃ ஃ

மக்கள் கூட்டத்தில் முதலில் பயத்தை உண்டாக்கியது அறியாமைப் பருவத்திலும் அல்ல; அறிவுடைய பருவத்திலும் அல்ல; அறிந்தும் அறியாமலும் இருந்த இரண்டுங்கெட்ட பருவத்திலேயே அச்சமென்னும் தன்மை மக்களிடம் குடிகொள்ளத் தொடங்கியது.

ஃ ஃ

இன்னும் நாகரிகம் பெறாத காட்டுமிராண்டிகளிடம் அச்சமென்னும் தன்மை சிறிதேனும் இல்லாதிருப்பதைக்காணலாம். அவர்கள் தங்கள் உயிரைப்பற்றிச்சிறிதும் கவலைகொள்ளாமல் வாழ்வதைக்காண்கின்றோம். அவர்கள் காடுகளிலும் நம்மால் செல்லுதற்கரிய மலைகளிலும் கொடிய விலங்குக்கூட்டங்களுடனும் நச்சுப்பிராணிகளுடனும் இரவு பகல் அச்சமின்றி ஊடாடி உறைவதைக்காண்கின்றோம். ஆதலால் மக்கள் அறிவுவளர்ச்சியடையாத காலத்தில் அச்சமற்றவர்களாகவே வாழ்ந்து வந்தார்களென்பதை அறியலாம்.

ஃ ஃ

இன்று அறிவில்மேம்பட்டு ஒவ்வொரு இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் காரணம் கண்டுபிடிக்கும் பகுத்தறிவு வாய்ந்த மக்களும் அச்சமின்றி ஆண்மையோடு வாழ்வதைக்காண்கின்றோம். இத்தகைய அறிவுடைய மக்கள்தான் இன்று தமது தாய் நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள பிற நாடுகளில் குடிபுகுந்து அந்நாடுகளைத் தமது கைக்குள்ளாக்கிக்கொண்டு தலைமைப்பதவி பெற்றுச்சிறந்து வாழ்கின்றனர்.

அன்றியும் உயிருக்கு ஆபத்து உண்டாகும் என்பதைக் கண்கூடாக அறிந்திருந்தும் வான ஊர்தியில் அச்சமின்றி ஊர்ந்து வானக் காட்சியைப் பற்றிய ஆராய்ச்சிகளைப் புரிகின்றனர். இந்துக்கள் இறந்தால் ஒழிய உடம்போடு போகமுடியாது என்று கருதிக்கொண்டிருக்கும் 'கைலாசம்' என்னும் இமயமலைச்சிகரத்தின் உச்சிவரை சென்று உண்மைகாண முயலுகின்றனர்.

ஃ ஃ

மேற்கூறியவைகளைக் கொண்டு இன்ற அச்சத்தால் மனஞ்சோர்ந்து எடுத்தகாரியம் எதினும் வெற்றியிழந்து வாடி, வதங்கிக்கிடப்போர் இரண்டுங்கெட்ட ஏழைமாந்தர்களே என்பதை உணரலாம்.

ஃ ஃ

தத்துவ ஆராய்ச்சி தோன்றிய காலத்தில்தான் மக்களிடம் அச்சம் அதாவது கோழைத்தனம் இன்னும் விளக்கமாகக்கூற வேண்டுமானால் பேடித்தனம் என்பது உண்டாயிற்று.

ஃ ஃ

மனிதன், தன்உடல்வேறுஎன்றும் உடலை இயங்கச்செய்யும் உயிர் என்பது வேறு என்றும் ஒருவகையாக எண்ணத்தொடங்கினான். இவ்வாறு எண்ணத்தொடங்கிய காலந்தான் மக்கள் தொகுதியில் பயம் என்னும் 'சனியன்' புகுந்தகாலம்.

ஃ ஃ

உயிர் என்பது ஒன்று தனியாக இருக்கிறது என்று எண்ணத்தொடங்கியவுடன் இறந்த பின் என்ன நடக்கும் என்று ஆராயத்தொடங்கினான். இவ்விஷயத்தில் ஒன்றும் புரியாமல் தயங்கினான். கடைசியாக, உலகத்தில் ஏராளமாக மக்கள் பிறப்பதையும், இறப்பதையும் மற்றைய பிராணிகளுடைய வாழ்வும் இவ்வாறே இருப்பதையும் கண்டான் உடனே இறந்துபோன உயிர்கள் தான் மீண்டும் பிறக்கின்றன என்று நினைத்துக்கொண்டான். இதனால் மறுபிறப்புக்கொள்கை ஏற்பட்டுவிட்டது.

ஃ ஃ

அதன்பின் உலகில் உற்பத்தியாகும் பொருள்கள் எப்படிஉற்பத்தியாகின்றன என்பதைக்கவனிக்கத்தொடங்கினான். இதிலும் உண்மை விளங்கவில்லை. தட்பவெப்ப நிலைமைக்கு ஏற்றவாறு சில சிறுபிராணிகள் தோன்றுகின்றன என்ற உண்மைஅக்காலமனிதனுக்கு எட்டவில்லை. ஒரு பொருள் தனது உருவத்தில்சிறிது சிறிதாக மாறுபட்டு (தவளைபோல) நாளடைவில் வேறுபொருளாக மாறுபடுகின்றது என்ற உண்மையும் அக்கால மனிதன் அறிவுக்குப்புலப்படவில்லை. ஆகையால், மனிதன் வீடு கட்டுவதனாலும், சட்டிபானைகள் செய்வதனாலும், வீடு, சட்டிபானைகள் போன்ற பொருள்கள் தோன்றுவதைக்கண்டு, இவைபோலவே உலகையும், அதில்உள்ளபொருள்களையும் ஏதோ ஒருபொருள் உண்டாக்கியிருக்கவேண்டும் என்று கருதினான். இக்கருத்தைதான் கடவுளாகவும், தெய்வமாகவும், பிரமமாகவும், சக்தியாகவும் கற்பனைசெய்தான்.

ஃ ஃ

இத்தகைய கடவுள் கொள்கைஏற்பட்டபின், அதாவது இக்கொள்கையை மனிதன் கற்பித்துக்கொண்டபின், அவனிடத்திலிருந்த பயம்மிகவும் கொழுந்துவிட்டு வளர ஆரம்பித்துவிட்டது.

ஃ ஃ

பயந்தவனை ஏமாற்றுதல் எளிது; அவனை எந்தக்கற்பனைச்செய்தியையும் நம்பவைப்பதும் எளிது; ஏமாற்றும் தந்திரசாலிகள் பயந்தவனைத் தம்சொற்படி ஆடும்படி செய்தல்மிகவும்எளிது; ஆதலால் சுயநலக்காரர்கள் சோம்பேறிகள், ஏமாற்றுக்காரர்கள் அனைவரும் "கடவுள்" என்னும் பொருளற்ற பெயரின்உதவிகொண்டு பொய்க்குழியில் மூழ்கியுள்ளஜனசமுதாயத்தை தங்கள் விருப்பத்தின்படியெல்லாம் ஆட்டிவைக்கத் தொடங்கினர்.

ஃ ஃ

ஏமாற்றுக்காரர்கள் ஜனசமூகத்தாரை எளிதில் ஏமாற்றி அவர்கள் பொருளைப்பறிக்க ஏற்படுத்தியவைகளில் முதன்மையானவை சுவர்க்கமும் நரகமும்ஆகும். சுவர்க்கம் ஆசைகாட்டுதல்; நரகம் பயமுறுத்துதல். ஆசைகாட்டுதலும் பயமுறுத்துதலும் ஆகிய கற்பனைகள்தான் சுவர்க்கம் நரகம் என்பவை. அவைகளைப் பற்றிப் புராணங்களில் என்ன கூறப்படுகின்றது என்பதை உணர்வோர் எளிதில் தெரிந்துகொள்ளுவர்; கூறியதை ஆராய்ந்து பார்க்கும்அறிவுடையவர்களுக்கேஇவ்வுண்மை தெரியும். கூறியதை அப்படியே நம்பும் களிமண் மூளைக்காரர்களுக்கு இவ்வுண்மை என்னதான் இடித்திடித்துக் கூறினாலும் விளங்காது.

ஃ ஃ

மக்கள் அனைவரும், உலகில் இன்புற்று வாழவே விரும்புகின்றனர். ஏழைகள் முதல் பணக்காரர்கள்வரை அனைவரும் விரும்புவது தங்கள் நலம் ஒன்றே யாகும். "நாம் அழகான மாளிகைகளிலும், தோட்டங்களிலும் வசிக்க வேண்டும்; உலவவேண்டும்; அழியாத இளமைப்பருவத்துடன் இருக்கவேண்டும்; அழகிய பெண்களுடன் வாழ்ந்திருக்க வேண்டும்; நாம் என்னென்ன வேண்டுமென்று நினைக்கின்றோமோ அவைகளையெல்லாம் பெறவேண்டும்" என எண்ணாத, ஆசைப்படாத மக்கள் எவரும் இலர்.

ஃ ஃ

மக்களின் இந்த மனப்பான்மையை ஏமாற்றுக்காரர்கள் நன்றாய் ஊகித்து உணர்ந்தாகள். உடனே அவர்கள் சுவர்க்கத்தை ஏற்படுத்தினர். அங்கே சிறந்த பொன்மாளிகைகள் இருக்கின்றன; கற்பகச்சோலைகள் உள்ளன; எப்பொழுதும் அமுதம் உண்டு இளமையோடிருக்கலாம்; அழகிய தேவமாதர்களுடன் இன்புற்று வாழலாம் வேண்டியவற்றையெல்லாம் கொடுக்க, சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி கற்பகத்தரு, காமதேனு என்னும் ஐவகைச்செல்வங்கள் உள்ளன. ஆகையால் சுவர்க்கம் புகுந்து இப்போகங்களைத் துய்க்க வேண்டுமாயின், இவ்வுலகில் தனக்கென்று பொருள் வைத்திராமல் அறம் புரியவேண்டும். அதிலும் குருமார்களுக்கும், ஆச்சார அனுஷ்டானமுடைய பார்ப்பனர்களுக்கும், "கடவுள் அடியார்" களுக்கும் பொருளைத்தானம் புரியவேண்டும்; என்று பலவகையான சரித்திரங்களை எழுதிவைத்தனர். மக்களும் இவைகளை நம்பித்தங்கள் செல்வங்களை இந்த ஏமாற்றுக்காரர்களுக்குப் பரம்பரையாக அழுதுகொண்டே வருகின்றனர். இது ஆசையின் மூலம் உண்டான அல்லலேயாகும்.

ஃ ஃ

அடுத்தபடியாக, பயத்தின் மூலம் உண்டான நரகத்தைப் பார்ப்போம். நரகம் கோடிக்கணக்கானவை. சில நரகங்கள் பாம்புகள் நிறைந்த குழிகளாக இருக்குமாம்; சிலநரகங்கள் நட்டுவாய்க்காலிகள் நிறைந்த குழிகளாம்; சில நரகங்களில் நெருப்பு எரிந்து குழம்பாக இருக்குமாம்; சில நரகங்கள் கொதிக்கும் எண்ணெய்க் குழிகளாக இருக்குமாம்; சில நரகங்களில் செக்கு ஆடிக்கொண்டே இருக்குமாம்; சில நரகங்களில் கழுமரங்கள் நடப்பட்டிருக்குமாம்; என்று இம்மாதிரிதான் நரகங்களைப் பற்றி வருணிக்கப்பட்டுள்ளது. ஆகவே இவைகளில் இவ்வுலகில் இல்லாத விஷயம் ஏதாவது இருக்கின்றதா? என்று பாருங்கள்! இந்த நரகங்களை அடைகின்றவர்கள் யார்? தருமஞ்செய்யாதவர்கள். என்னும் விஷயங்களை ஆராயும் போது இது பயமுறுத்திப் பொருள் பறிக்கும் சூழ்ச்சி என்பது விளங்காமல் போகாது.

ஃ ஃ

ஆகவே மேற்கூறியவைகளால், "ஆன்மா" "மறுபிறப்பு" "கடவுள்" முதலியவைகள் ஏற்பட்டபின், சூழ்ச்சிக்காரர்கள் "சுவர்க்கம்" "நரகம்" என்னும் ஆசையும், பயமும் உண்டாக்கப்பட்டு மக்கள் கூட்டத்தைப் பாழ்படுத்தின என அறியவேண்டும்.

சென்னையில் ஆர். கே. சண்முகத்திற்கு வரவேற்பு.

ஒட்டவா மகாநாட்டுப் பிரதிநிதியாகச்சென்று திரும்பிய உயர்திரு ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல், எம். எல். ஏ. அவர்கள் பம்பாய் மெயிலில் 5-10-32ந்தேதி சென்னைவந்துசேர்ந்தார். புகைவண்டி சரியாய் காலை 5-55க்கு ஸ்டேஷனை சேர்ந்தவுடன் ரயிலடியில் அவர் வருகைக்காக எதிர்பார்த்திருந்த பல பிரபலஸ்தர்களும், கொன்னூர் மேலையம்பதிசமதர்மசங்கத்தலைவருடன் அங்கத்தவர் களும் நல்வரவு கூறி பூமாலைகள் சூட்டபெற்று புகைப்படங்கள் எடுக்கப்பட்டது. சமதர்ம சங்கத்தாரால் வரவேற்பு பத்திரம் ஒன்று சங்கக் காரிய தரிசியால் அளிக்கப்பட்டதென ஒரு நிருபர். எழுதுகிறார்

"சமதர்ம முரசு"

பொதுவுடைமை வாழ்வில் பெண்டிர் நிலைமை.

"தாதரென்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும் சரி, நிகர், சமானமாக வாழ்வர் இந்த நாட்டிலே!''

(தோழர் A. இரத்தினசபாபதி)

(9)

தந்நலமும், ஈயவஞ்சகமும், பொருமையும், அற்ற பொதுவுடைமை வாழ்வில் பெண்டிரின் நிலைமை எவ்வாறிருக்கும் என்பதைத் தனியாக விவரிக்கவேண்டிய அவசியமில்லையென நாம் கருதிய போதிலும் அதைப்பற்றி பலர் நம்மை வினவுகின்றமையின் இவ்வத்தியாயத்தில் அதனைச்சற்று விவரித்து பின்னர் மேலே செல்லுவாம்.

பொதுவுடைமை

என்ற சொல்லிற்கே 'எல்லோருக்கும் பொதுவான உரிமைகளை எல்லோரும் அனுபவிக்க உடைத்தாயிருத்தல்' என்று தான் பொருள்படும். 'மனிதசமூகத்திற்கின்றியமையாதவை' என வகிக்கப்படும் எதுவும் ஆடவருக்கும் பெண்டிருக்கும் பொருந்தியதேயாம். உணவு, உடை, ஓய்வு, முதலிய எல்லாம் இருபாலாருக்கும் பொதுவானதாகவே இருக்கும்.

இவ்வாறு நாம் கூறுங்கால் சிலர் இரண்டொரு பிரசினைகளைக் கிளப்புகின்றனர். அவை, (1) பெண்களும் ஆண்களைப்போல் தேகபலம் உடையவர்களாயில்லையாதலின் அவர்களும் ஆடவரைப்போல் வேலை செய்தலென்பது பொருத்தமானதா? (2) பெண்கள் ஆண்களைப்போல் மனோதிடமும் போதிய சிந்தனைசக்தியுமற்ற பேதைகளாயிருக்கையில் அவர்களும் ஆடவரைப்போல் எல்லா உத்தியோகங்களிலும் ஈடுபடல் என்பது பொருத்தமுடையதா? (3) பெண்களுக்கு எல்லாவகை உரிமைகளையும் கொடுத்துவிட்டால் அவர்கள் மமதையுடையோராகிவிட, அதனால் உலகசமாதானமின்றிப் போய்விடாதா? என்பனபோன்றவையாம்.

ஆனால் இவைகள் மிகப்பிரமாதமான பெரிய பிரச்சினைகளெனக் கூறுவதற்கில்லை. குறுகியமனப்பான்மையையும் சுயநலபுத்தியையும் அப்பால் ஒதுக்கிவிட்டு நேர்மைவழி நின்று நோக்குவோருக்கு இவைகள் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாகக்காணப்படமாட்டாது.

முதலாவது பெண்டிர் ஆடவரைப்போல் தேகபலமுடையோரல்லவெனக்கூறுவது இயற்கைக்குப் புறம்பானதாகும். இன்று நாம் பார்க்கும பெண்மணிகள் நல்ல உடல் உறம்பெற்றவர்களாயில்லையே எனில் அதற்கு ஆடவரே காரணம் என்பதை அறியவேண்டும். குழந்தை பிறந்தவுடன் ஆண் குழந்தையானால் பெற்றோர் அதனைப்பராமரிக்கும் மாதிரியிலும், அதுபெண்குழந்தையாயிருந்தால் அதனைப்பராமரிக்கும் மாதிரியிலுமே பேதம் காட்டப்படுகிறது. இது அறிவீனமாகும். 'ஆண்குழந்தை' என்றவுடன் மனம் பூரிப்பதும், பெண் குழந்தைஎனில் மனம் வாடுவதும் நம்மிந்தியரின் பரம்பரை வழக்கமாகவிருக்கின்றமையின் காரணமாகவே பெற்றோர் பெண்குழந்தையின் பராமரிப்பில் சரியான கவனம் செலுத்தாததற்குக் காரணமாம். இந்த அசட்டுப்புத்தி எதனாலுண்டாகிறதெனில் 'பெண்கள் பாபஜென்மங்கள்; ஆண்களின் சுகத்துக்காகவே அவர்கள் ஆண்டவனால் படைக்கப்பட்டிருக்கின்றார்கள்; ஆதலின் அவர்கள் ஆடவரின் அடிமைகள் என்ற அற்பத்தனமான கொள்கை இவ்விந்திய நாட்டில் ஊன்றியிருப்பதால்தான்.

'பெண்களுக்கு எக்காலத்தும் சுதந்தரமே கிடையாது; சிறுபருவத்தில் அவர்கள் பெற்றோருடைய பாதுகாப்பிலிருக்கவேண்டும், பருவமங்கையானதும் கணவனின் கண்காணிப்பிலிருக்கவேண்டும்; வயோதிககாலத்தில் தன்புத்திரனின் பாதுகாப்பிலிருக்கவேண்டும்; குழந்தை பெறுமுன்னரே மணவாளன் மாண்டுவிட்டால் அவள் தனது சகோதரனுடையவோ, புருடனுடன் பிறந்தோருடையவோ ஆதரணையிலிருக்க வேண்டும்''

என இந்துமதச்சாத்திரம் சாற்றுகிறது! 'பெண்டிருக்கு ஆன்மாவே கிடையாது' எனமற்றோர் வேதம் விளம்புகிறது.

'பெண்கள் ஆண்களின் சுகத்திற்காகவே ஆண்டவனால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறார்கள்' என மற்றோர் மதம் கூறுகிறது.

'ஆடவனின் விலாவெலும்பிலிருந்தே பெண் உண்டாக்கப்பட்டாள்' என இன்னொரு வேதம் அறைகிறது

இவைஎல்லாமென்ன? பெண்ணானவள் ஆடவனுக்கடிமையாகவிருந்து, அடுப்பூதி சோறுசமைத்து ஆடவனுக்கு அளிக்கவேண்டும்; வீடுவாசலையெல்லாம் சுத்தம்பண்ணி ஆடவனுக்கு சுகாதாரவசதி யுண்டுபண்ணவேண்டும். அவனுக்குப்படுக்கை விரிக்கவேண்டும், கால்பிடிக்கவேண்டும், அவன் விரும்பும்போதெல்லாம் அவனுக்கு இன்பங்கொடுக்கவேண்டும், அவன்தனது சுயநலத்திற்காகத்தன் மனைவியைப்பிறனுக்கு—அனுப்பியோ காரியசித்தி செய்துகொள்ளவேண்டும் என்ற இந்த ஆடவனின் சுயநல தூர்ச்சிந்தையும், பெண் என்றேனும் மீறிவிட்டால் தங்கள் சுகங்கெட்டுவிடுமேயென எண்ணி, இது ஆண்டவன் வாக்கு அது கர்த்தரின் கருத்து, இது பரம்பொருள் பகர்ந்தது, பெண்களுக்கு சுதந்திரமே கூடாது' என்று ஏடுகளில் எழுதிவைத்துக்கொண்ட அக்கிரமமுமேயல்லாது இந்த அபத்தப் பல்லவிகளுக்கெல்லாம் வேறென்ன அறிவிற்குப்பொருந்திய பொருளிருக்கிறதெனக்கேட்கிறோம்.

பெண்கள் பாபஜென்மங்களென்றால் அந்தப்பாபஜென்மங்களின் வயிற்றில் புண்ணியஜென்மங்களாகிய ஆடவர் பிறப்பது எந்த நியாயத்தைக்கொண்டென்பது கேள்வி. பெண்கள் ஒரு கோடி பாபம் செய்து ஜனித்தவர்களென்றால் அவர்கள் உதிரத்தில் 10 மாதம் ஊறிப்பிறக்கும் ஆடவர்கள் 10 கோடிபாபம் செய்த ஜன்மங்களாகமாட்டார்களா என்பது கேள்வி. பெண்களுக்கு ஆன்மாவே கிடையாதென்றால் ஆண்களுக்குள் ஆன்மா எங்கிருக்கிறதென்பது கேள்வி. ஆதி ஆடவனாகிய ஆதாமின் விலாவெலும்பொன்றிலிருந்து ஆதிஸ்திரீயாகிய ஏவாள் உண்டாக்கப்பட்டாளென்றால் அவர்களின் சந்ததியார்களாகிய நம்மில் ஆடவருக்கு ஓர்பக்கத்து விலாவெலும்புகளில் ஒன்று குறைவாயிருக்குமல்லவா என்பது கேள்வி. மேலும் பரிபூரணமான ஓர் மனிதனின் உடம்பிலிருந்து ஓரெலும்பெடுத்து பரிபூரணமான ஓர்பெண் சிருஷ்டி செய்யப்பட்டாளென்றால் இப்போது பெண்களுக்கிருப்பதைவிட ஆண்களுக்கு விலாவெலும்பொன்று குறைவாக விருக்கவேண்டுமல்லவா? என்பது கேள்வி. வைதீகப்பித்தர்கள் இவற்றிற்கெல்லாம் தக்க பதிலிறுத்தாகவேண்டும்.

'கடவுள் ஸ்திரீகளுக்கு தேகவலிமையை அளிக்கவில்லை' என்றால் இன்று உலகிலுள்ள பெண்களில் எத்தனையோ பேர் ஆண்களைவிட அதிகபலமுள்ளவர்களாயிருப்பது எந்தக்கடவுளின் செயலால் என்பது கேள்வி. 'பெண்களுக்கு மனோதைரியத்தை இறைவன் கொடுக்கவில்லை' என்றால் இன்றையதினம் உலகில் ஆண்களைவிட அதிகமான மனோதைரியத்துடனும், கலங்காத புத்தியுடனும் பல அரும்பெருஞ் செயல்களியற்றி ஆடவரும் புகழ மிளிர்வது எந்த இறைவனின் தவறுதலால் என்பது கேள்வி, வைதீகர்கள் இவற்றிற்கென்ன பதில் கூறுகிறார்கள்?

உண்மை என்ன

வெனில், எக்காலமும் பெண்களைத்தங்களுக்கு அடிமையாகவைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பியதால் பலவகைகளிலும் அவர்களின் சக்தியைக்குறைத்தார்கள். அதுபிற்காலத்தும் அழிந்துவிடாதிருப்பதற்காக அவ்வாறே எழுதிவைத்தார்கள்; பாமர மக்கள் அவற்றை நம்புவதற்காக அவர்களுக்குப் போதிய தேகப்பயிற்சி கொடுக்க மறுத்தார்கள். போதிய உணவுண்ணுவதையும் தடுக்கவேண்டி 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு' என எழுதி வைத்தார்கள்.—இன்றும் சீனா தேசத்தில் பெண்குழந்தை பிறந்தவுடன் அதன் பாதங்களை இரும்புப்பூட்சுகளில் திணித்து அவர்கள் பெரியவர்களான பின்னரும் ஓடவும் முடியாதபடி அவ்வளவு குறுகலாகச்செய்கிறார்கள். இது பெண்களின் பலத்தில் ஒன்றைக் குறைக்கும் வழி. ஆனால் அது "அழகு" என்றுகூறி அவ்வாறே நம்பும்படி செய்யப்பட்டது.

இவ்விதமெல்லாம் பெண்களது தேகபலத்தைக்கெடுத்து விட்டமையின், அவர்களின் வழி வந்தவர்களாகிய பெண்களும் பலமற்றவர்களாகவே விருக்கிறார்கள். பெண்டிர்க்குப்போதிய தேகப்பயிற்சியளித்தால் அவர்கள் பலமுடையவர்களாகவே இருப்பார்களென்பதில் ஐயமின்று.

இன்று வயல்வெளிகளில் வேலை செய்யும் ஏழை ஜனங்களில் பெண்களும் போதிய தேகபலம் பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். அதற்குக்காரணம் அவர்கள் தங்கள் தேகத்திற்குப் போதியவேலை கொடுப்பதுதான். தாராபாய் என்னும் ஓர் பெண்மணி மிகுந்த தேகபலம்பெற்றவராயிருப்பதுடன் தனது தலை உரோமத்தில் ஓர் பெருங்கல்லைக் கட்டித்தூக்கவும் கூடியவராயிருக்கின்றார். அது அவரது பயிற்சியின் பயன். இவர்களெல்லாம் தேகபலம் பெறுவதில் எந்தத்தெய்வமும் குறுக்கேவந்து நிற்கவில்லை. 'ஆடவர்கள்தான் பலமுள்ள சிருஷ்டிகள் அதற்குவேத ஆதாரமிருக்கிறது' என்று கூறும் ஐயர்மார்கள் அந்த வேதத்தை எடுத்துக்கொண்டு ஸ்ரீமதி தாராபாயுடன் தேகபலத்தில் போட்டியிட்டுப்பார்க்கட்டும்!

எனவே பலவகையாலும் பெண்டிர் சமூகத்தைத் தாழ்த்தி வைக்கக் கருதி சுயநலவாதிகளான ஆடவரால் செய்யப்பட்ட சூட்சிகளின் வயப்பட்டமையாலேயே நமது பெண்கள் பலவீனர்களாக இருக்கிறார்களென்பது வெளிப்படை. இனி வருங்கால

பொதுவுடைமை வாழ்வில்

பெண்கள் எவ்வாறிருப்பரெனச் சிறிதுவரைவாம். பொதுவுடைமை

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

தஞ்சைப் பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

குழப்பமும், கூச்சலும்.

ஆரவாரமான கூச்சலுக்கிடையே வரவேற்புத்தலைவர் பிரசங்கமும், தலைவர் பிரசங்கமும் நடைபெற்றன.

சுயமரியாதைக்கூட்டங்கள்.

(நமது நிருபர்)

சென்ற 8, 9-10-32 சனி ஞாயிறுகளில், தஞ்சையில் ராவ்பகதூர் ராமநாதன் செட்டியார் ஹாலில், சென்னை மாகாணப் பார்ப்பனரல்லாதாரின் பன்னிரண்டாவது மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இம்மகாநாட்டில், ஜஸ்டிஸ் கட்சிக்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினையும், கட்சியில் பார்ப்பனரைச் சேர்த்துக் கொள்ளுவதா இல்லையா என்ற பிரச்சினையும் முக்கியமானதாக இருந்ததால், மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும், 5000 ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள் என்பவர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்துவிடவேண்டும் என்னும் நோக்கமுடைய, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், இதரகட்சியைச் சேர்ந்தவர்களும் விஜயம் செய்திருந்ததும் குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியார் 6-10-32 க்கு முன், ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் வரும் பிரதிநிதிகளின் ஜாப்தாவை அனுப்பி விடவேண்டும் என்றும், அதன் பின் வரும் பிரதிநிதிகளின் ஜாப்தாவை ஒப்புக்கொள்ள முடியாதென்றும் பத்திரிகைகளின் மூலம் முன்னமே அறிவித்தனர். ஆனால், தலைவர் பதவிக்கும், மந்திரிப்பதவிக்கும் ஆசைப்பட்ட சிலதலைவர்கள், மகாநாட்டின் நாளாகிய 8-10-32 அன்றே தங்களுக்குத் துணையாக இருக்கவேண்டிப் பல பிரதிநிதிகளைக் கூட்டிக் கொண்டுவந்து, அவர்களுக்கெல்லாம் பிரதிநிதிச் சீட்டுக்கள் வேண்டுமெனறு கேட்டார்களாம். மகாநாட்டு நிர்வாகிகள், அவர்கள் முன்னமே தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படாத பிரதிநிதிகள் என்ற காரணத்தால் டிக்கட் கொடுக்க மறுத்து விட்டார்களாம். இந்தக் காரணத்தாலும், இன்னும் தலைவர்களுக்குள் ஏற்பட்டிருந்த குழப்பத்தாலும், 8—10—32 சனி காலையில் 8 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய மகாநாடு மாலை 3 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் மாலை 3 மணிக்கு மகாநாடு கூடும் என்று எதிர்பார்த்து ராவ்பகதூர் ராமநாதஞ் செட்டியார் ஹாலுக்கு எதிரே வெளியில் ஏராளமான பிரதிநிதிகள் கூடியிருந்தனர். அவர்களுள் டிக்கட்டில்லாதவர்கள், எல்லோரும், ஒரே கூட்டமாக ஹாலுக்குள் செல்லும் வழியை மறித்துக் கொண்டு நின்றனர். அவர்கள் அனைவரும் பெரும்பாலும் ஆந்திரதேச மக்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஜஸ்டிஸ் கட்சியில் கலகம் உண்டாக்க வேண்டும் நோக்கமுடைய இதர கட்சியைச் சேர்ந்தவர்களுமே யாவார்கள். அவர்கள் வழி திறக்கப்படாமலிருப்பதைக் கண்டு ஆத்திரங்கொண்டு, கேட்டுக் கதவின் மேலும், மதிலின் மேலும் ஏறிக்குதித்து ஹாலுக்குள் சென்று நிரம்பிவிட்டார்கள். கேட்டின் ஒருபக்கக்கதவும் பிடுங்கப்பட்டு விட்டது. பிறகு வெளியில் காத்திருந்த பலரும் உள்ளே சென்றார்கள்.

சிறிது நேரத்திற்குப் பின், முதன் மந்திரி, திவான்பகதூர் முனுசாமி நாயுடு அவர்களும், மூன்றாவது மந்திரி திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்களும், செட்டிநாட்டுக் குமார ராஜா, திரு. ராமகிருஷ்ண ரெட்டி, திரு. ராமசாமி சௌத்திரி முதலானவர்களும், வந்து சேர்ந்தார்கள். இவர்களைக் கண்டவுடன், முனுசாமி நாயுடுக்கு ஜே! என்ற சப்தமும், முனுசாமி நாயுடுவுக்கு வெட்கம் என்ற சத்தமும் மிகவும் அதிகமாக இருந்தன. கூட்டத்தினர் சத்தத்தை அடக்குவதற்கு எவ்வளவோ முயன்றும் முடியாமற்போயிற்று. இதற்கிடையில் மகாநாட்டின் வரவேற்புக்கமிட்டித் தலைவர் திரு. என். ஆர். சாமியப்பமுதலியார் அவர்கள் வந்து மகாநாட்டை ஞாயிற்றுக்கிழமை 8 மணிக்கு ஒத்திவைத்திருப்பதாக அறிவித்து விட்டு, வெளியே சென்று விட்டார். அதன் பிறகு திரு. முனுசாமி நாயுடு, திரு. குமாரசாமி ரெட்டியார் செட்டிநாட்டுக் குமார ராஜா முதலானவர்களும் வெளியே வந்துவிட்டார்கள்.

பிறகும், கொட்டகைக்குள்ளிருந்த, ஆந்திரர்கள் கொட்டகையை விட்டு வெளியேறாமல் அவர்களாகவே ஒரு கூட்டம் நடத்த ஆரம்பித்தார்கள். அக்கூட்டத்திற்கு திரு. ராமசாமி சௌத்திரி அவர்கள் தலைமைவகித்தார். தெலுங்கிலேயே எல்லாம் நடைபெற்றன. அக்கூட்டத்தில், திரு. முனிசாமி நாயுடு அவர்களையே ஜஸ்டிஸ் கட்சிக்குத்தலைவராகத் தேர்ந்தெடுப்பதாகவும், கட்சியில் பார்ப்பனரைச்சேர்த்துக்கொள்ளுவதாகவும் அடுத்த மகாநாட்டை குண்டூரில் நடத்துவதாகவும், சட்ட சபையில் வர இருக்கும் ஜமீன்ரயத்துவாரி மசோதாவை ஆதரிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

அதன்பின், அவ்விடத்திலேயே ஒரு சுயமரியாதைமகாநாடு நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு, சில தெலுங்கர்களும், எல்லாத்தமிழ் ஜில்லாக்களின் பிரதிநிதிகளும் ஹால்நிறையக் கூடியிருந்தனர். கூட்டத்திற்குப்பட்டுக்கோட்டை, திரு. எஸ். கே. சிதம்பரம் அவர்களைத் தலைமைவகிக்கும்படி, பிரரேபித்து ஆமோதிக்கப்பட்டபின், அவரும் தலைமைவகித்து; முன்னுரைகூறியபின், புதுக்கோட்டை திரு. முத்துச்சாமி வல்லத்தரசு, பி. ஏ, பி. எல். அவர்களைப்பேசுமாறு கேட்டுக்கொண்டார். அவரும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றிப்பேசினார். அதன்பின், திருமதி, நீலாவதி, குருசாமி, குஞ்சிதம், அழகர்சாமி, காளியப்பன் பண்டிதர் திருஞானசம்மந்தம், முதலியவர்கள் பேசியபின் இரவு 8 மணிக்குக் கூட்டம் கலைந்தது,

இரண்டாம் நாள்

9—10—32 ஞாயிற்றுக்கிழமை ஒத்திவைக்கப்பட்டிருந்த பார்ப்பனரல்லாதார் மகாநாடு எவ்வாறு நடைபெறப்போகிறதென்பதை எல்லோரும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். சிலதலைவர்களின் முயற்சியால், முதல்நாள் டிக்கட் கொடுக்காமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எல்லோருக்கும் டிக்கட் கொடுக்கப்பட்டு விட்டது. முதல் நாள் கதவேறிக்குதித்தும், சுவரேறிக்குதித்தும் சென்ற பிரதிநிதிகள் மறுநாள் டிக்கட்பெற்றுக் கொண்டு, காலை ஆறுமணிக்கே ஹாலுக்குள் சென்று, ஹாலின் மத்திய பாகத்தில் ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். 8 மணிக்குமேல், மகாநாட்டுக்கொட்டகைக்கு கனம், பி. டி. ராஜன், கனம், குமாரசாமிரெட்டியார், கனம் முனிசாமிநாயுடு, திருவாளர்கள் பொப்லி அரசர் (மகாநாட்டுத்தலைவர்) சாமியப்ப முதலியார் (வரவேற்புக்கழகத்தலைவர்) சர். பாத்ரோ, சர். கே. வி. ரெட்டி, செட்டிநாட்டு ராஜா, செட்டிநாட்டுக்குமாரராஜா, வெங்கட்கிரி குமாரராஜா. மிர்சாபுரம் ஜமீன்தார், ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் பி. ரெத்தினவேலுதேவர், ஏ. டி. பன்னீர்ச்செல்வம். ஐ. குமாரசாமி பிள்ளை சி. எஸ். ரெத்தினசபாபதி முதலியார் எஸ். எல்லப்பச்செட்டியார் முதலானவர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டே இருந்தனர். திருவாளர்கள், முனிசாமிநாயுடு, பி. டி. ராஜன், பொப்லி அரசர், முதலானவர்கள் வரும் பொழுது, ஒருபக்கம் ஜே கோஷமும், ஒருபக்கம் வெட்கம் என்ற கோஷமும் மாறி மாறி ஒலித்துக்கொண்டே இருந்தது. கூட்டமோ கொட்டகையில் எள்விழ இடமின்றி நிறைந்தது. சத்தம் நிற்கவேயில்லை. திரு. வெங்கிடகிரி குமாரராஜா அவர்கள் சத்தத்தை அடக்க எவ்வளவோ பிரயாசைப்பட்டார். ஒன்றும்முடியவில்லை. திரு. பி. டி. ராஜனவர்கள் எழுந்து சபையினரைக்கும்பிட்டு, வரவேற்புத்தலைவர் பிரசங்கமும், தலைவர் பிரசங்கமும் ஆனபின் மகாநாட்டை ஒத்திவைக்கப்போவதாகவும், அதுவரையிலும் சத்தம்போடாமல் இருக்கவேண்டும் என்றும கேட்டுக்கொண்டார். ஒன்றிலும் சத்தம்அடங்கவில்லை.

பிறகு, மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர், தனது பிரசங்கத்தை வாசிக்க ஆரம்பித்தார். அப்பொழுது கூச்சல் வெகுபலமாக இருந்தது. வரவேற்புக்கழகத்தலைவர் பிரசங்கத்தைப் படிக்கவிடாதபடி எவ்வளவோ தடைசெய்து

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க,

தஞ்சை பிராமணரல்லாதார்
மகாநாடு.

வரவேற்புத்தலைவர் தோழர் என். ஆர்.
சாமியப்பா சொற்பொழிவு.

திருவாளர் என். ஆர். சாமியப்பா மேற்படி மகாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய போது சொன்னதாவது:—

3 வருஷங்களுக்கு முன் நாம் நெல்லூரில் கூடிக்கலைந்தபின் பல முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மகாத்மா காந்தி டாண்டியில் உப்பு சத்தியாக்ரஹம் செய்யப்போனார்; ஆனால் உண்மையில் தேச நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்வதற்கான சட்டமறுப்பு இயக்கத்தையே அதன் மூலம் அவர் ஆரம்பித்தார். சட்ட சம்மதமான முறையிலேயே நம்பிக்கையுடன் ஒரு கட்சியை நான் சேர்ந்தவன். ஒத்துழையாமை இயக்கம் பயனற்ற இயக்கம்.

முதலாவது சர்வகட்சி மகாநாடு நடந்து, அதன்பின் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. மகாத்மா காந்தி 2-வது லண்டன் மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டார். வகுப்பு முட்டுக்கட்டை பெருத்த இடையூறாக வந்து சேர்ந்து மகாநாடு பயனில்லாமற் செய்துவிட்டது. நமக்குள்ளேயே நாம் ஒத்துப்போக முடியவில்லையென்ற அவமானகரமான நிலைமை ஏற்பட்டது. முதன் மந்திரி நம்பொருட்டுத் தீர்ப்புக்கூற வேண்டியதாயிற்று. அது யாருக்கும் திருப்தியளித்ததாகத் தெரியவில்லை. என்னுடைய அபிப்பிராயத்தில் எல்லா சிறுபான்மையோருக்கும் தனித்தொகுதிகள் கொடுப்பதுடன் பொது ஓட்டர் ஜாப்தாவிலும் அவர்கள் இடம்பெறச் செய்யவேண்டும்; அதாவது முதன் மந்திரி தீர்ப்பில் தாழ்ந்த வகுப்பினருக்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அது எந்த சிறுபான்மை சமூகத்திற்கும் பொருந்தும்படி செய்துவிடலாம் என்பதே.

3-வது சர்வகட்சி மகாநாடுதான் முடிவானதாகவும் முக்கியமானதாகவும் இருக்கப்போகிறது. நமக்கு இதில் போதிய பிரதிநிதித்தும் இருக்கவேண்டும். நாம் தான் தேசத்தில் கட்டுப்பாடுள்ள கக்ஷியாக இருந்து வருகிறோம். ஆகையால் குறைந்தபட்சம் 4-பேராவது நம் பிரதிநிதிகள் மகாநாட்டுக்குப்போக வேண்டும். சென்றபொதுத் தேர்தலில் கனம் பி. முனுசாமி நாயுடு, கனம் ராஜன் இவர்களுடைய முயற்சியால் நாம் அதிகமான ஸ்தானங்கள் பெற்று மந்திரிசபை யமைக்கும் பொறுப்பும் நம் கக்ஷிக்கே ஏற்பட்டது. இனி நமக்கு ஒரு சக்தியில்லாமைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சீக்கிரத்தில் சீர்திருத்தம் வரப்போகிறது. நாம் தீவிரமான பிரசாரம் செய்ய வேண்டி யிருக்கும். நமது கக்ஷி ஸ்தாபனம் சில வருஷங்களாக பலஹீன மடைந்து வருகிறது. நமது கக்ஷிப் பத்திரிகைகள் அன்றாடக் காய்ச்சிகளாகக் காலட்சேபம் செய்து வருகின்றன. முதல்தரப் பத்திரிகைக்குள்ள லட்சணங்களுடன் இல்லை. கக்ஷிஸ்தாபனங்களை நாம் ஒதுக்கிப் புதிய உணர்ச்சியை எல்லோருக்கும் உண்டுபண்ண வேண்டும். நம் பத்திரிகைகளை இன்னும் திறமையானவர்கள் கையில் ஒப்படைக்க வேண்டும். உண்மையான தினசரிப் பத்திரிகைகளாக அவைகளைச் செய்ய வேண்டும். சரியான தலைவராக ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும். நிர்மாண சக்தியுள்ளவராயும், எல்லோருக்கும் சுலபமாயும், உறுதியுள்ளவராயும், திடமான கக்ஷி விசுவாசமுள்ளவராயும் தலைவர் இருத்தல் வேண்டும்.

பிராமணர்களை நம் கக்ஷியில் சேர்த்துக்கொள்வதைப் பற்றி இருவித அபிப்பிராயம் இருக்கிறது. திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமியும் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் பிராமணர்கள் ராஜீயப்பிரச்சனைகளில் நடந்துகொள்ளும் தோரணை பிராமணரல்லாதாருக்குப் பிடிக்கவில்லையென்றும், மற்ற கக்ஷிகளிலிருந்த பிராமணரல்லாதார் கூட இதின் நிமித்தம் ஜஸ்டிஸ் கக்ஷிக்குத் திரும்பி வருவதாகவும் முன்பு கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு மதிப்பு வைக்க வேண்டியதுதான். ஆனால் பிராமணர்களை நாம் விலக்குவதன் மூலம் நாம் ஒரு வகுப்புக்கக்ஷியென்றும், இம்மாகாணத்தார் சார்பாகப்பேசக்கூடிய அதிகாரம் முழு அளவுக்கு இல்லை என்றும் கூறப்படுவதையும் கவனிக்கவேண்டும். நமது கொள்கையை மாற்றிக்கொள்வதன் மூலம் நாம் ஒருவரே இந்த மாகாணத்தில் ராஜீயக் கக்ஷியாகி விடக்கூடும். எலக்ஷன் சமயங்களில் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு சில ஸ்தாபனங்கள் போலித்தனமாக ஆரம்பித்து அதிகாரமும் பதவியும் பெற முயலுவதைத் தடுக்கவும் இதுசாதனமாயிருக்கும். மேலும் பிராமணர் சூழ்ச்சிகளைக் கண்டு பயப்பட வேண்டிய காலம் இனியில்லை. ஆகையால் பிராமணர்களின் கக்ஷியில் சேர்த்துக் கொள்ளும் விஷயத்தில் நமது கொள்கையை மாற்றலாகாதா?

கடைசியாகத் தஞ்சை ஜில்லா மிராசுதார்களின் பரிதாப நிலைமையைப்பற்றிப் பிரஸ்தாபித்து, நிலத்தையே எல்லோரும் விட்டுவிடலாமா என்று யோசிக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும், மேட்டூர் நீர்ப்பாசனவரி (ஏக்கருக்கு 15 ரூபாய்) இதுவரை கேள்விப்படாததாயிருக்கிறதென்றும், இம்மகாநாடு இதைக் கவனிக்கவேண்டுமெனவும் சொல்லிமுடித்தார்.

சென்னை மாகாண
ஸ்திரீகள் மகாநாடு.

திருமதி மிர்ஸா இஸ்மெயில்
தலைமை வகித்தார்.

அகில இந்திய மாதர் மகாசபையின் சென்னைப்பிரிவு மகாநாட்டின் ஏழாவது கூட்டம் கல்வி, சமூகச் சீர்திருத்த விஷயமாக எழும்பூர் மியூசியம் தியேட்டரில் 8-ந்தேதி காலை நடைபெற்றது. கோஷாக்களுள்பட மாதர்கள் ஏராளமாக வந்திருந்தனர்.

டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி, லேடி மிர்ஸா எம். இஸ்மெயிலை தலைமை வகிக்கும்படி பிரரேபித்து லேடி மிர்ஸா இஸ்மெயில் மைசூரில் மாதர்களுக்காகச் செய்துள்ள காரியங்களை விவரித்துப் பாராட்டிப்பேசினார். மிஸஸ் அஸீம், மிஸஸ் ஹென்ஸ்மன் முதலியவர்கள் ஆமோதிக்க லேடி மிர்ஸா இஸ்மெயில் கரகோஷத்தினிடையே தலைமைவகித்தார்.

பிறகு மிஸஸ் அம்மு சுவாமிநாதன் பிரதிநிதிகளை வரவேற்று ஒரு பிரசங்கம் செய்தார்.

லேடி மிர்ஸா இஸ்மெயில் அக்கிராசனப்பிரசங்கம்.

லேடி மிர்ஸா எம், இஸ்மெயில் தலைமைப் பிரசங்கத்தைச் செய்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு:—இந்த ஏழாவது மகாநாட்டில் தலைமை வகிக்கும் உரிமையை நான் பெரிதாகக்கருதுகிறேன். இதற்கு என்னை அழைத்ததை எனக்கு ஒரு சொந்த கௌரவமாகப்பாராட்டவில்லை. ஆனால் உங்களுடைய வேலையில் ஈடுபட்டுவரும் இதர சுதேச நாட்டினருக்கும் முக்கியமாக மைசூரிலுள்ளவர்களுக்கும் ஒரு கௌரவத்தையளித்ததாகக்கருதுகிறேன். ஸ்திரீகளுள் வித்தியாசமின்மை.

நாங்கள் மைசூரில் வாரிசு உரிமை பொது ஸ்தாபனங்களில் பிரதிநிதித்துவம் முதலியவைகளை நீக்கப் பற்பல சீர்திருத்தங்கள் செய்திருக்கிறோம். இதற்காக நீங்கள் இப்பொழுது பிரயாசைப்பட்டு வருவதாக நிகழ்ச்சிக்குறிப்பிலிருந்து தெரியவருகிறது. நான் முஸ்லிம் வகுப்பைச்சேர்ந்தவளாகையால் என்னை இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க அழைத்ததை நமக்குள் வித்தியாசமில்லாமல் இதர மேல்நாடுகளைப்போல் இந்தியாவும் ராஜீயத்திலும், சமூகத்திலும் பொருளாதாரத்திலும் முன்னுக்குவர நாம் உழைக்க முடியும் என்பதை விளக்கவே என்று நினைக்கிறேன். உங்கள் ஸ்தாபனம் சிற்சில விஷயங்களைப்பற்றி மட்டும் விவாதிக்கக் கூடியதல்லவென்றும், எல்லா விஷயங்களைப்பற்றியும் நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்றும் நான் சந்தோஷத்துடன் அறிகிறேன். இதைப்போன்ற ஸ்தாபனங்கள் சிறிய ஒரு கிராமத்திலிருந்து பெரிய நகரம்வரை இருக்கவேண்டும். நம்முடைய சமூகப் பிரச்சினைகளில் சரியான கவனத்தைக்கிளப்ப இன்னும் அதிகமான பிரசாரம் வேண்டும். தவிரவும் ஏராளமான தொண்டர்களை நாம் சேர்க்கவேண்டும்.

சில முனிசிபாலிட்டிகளில் சுகாதாரத்திற்காக விஜயம் செய்பவர்களை வைத்திருப்பதுபோல் நாமும் தேர்ச்சிபெற்றவர்களை வைத்துக்கொள்ளவேண்டும். ஆங்காங்கு வீடு வீடாகச்சென்று அவரவர்கள் வீடுகளிலேயே உதவியளிக்க வேண்டும். இதைப் பெரியநகரங்களில் உடனே ஆரம்பிக்கலாம். நம்முடைய வருங்கால வேலைகளில் நமக்குப் போதுமான கிராண்டுகள் மூலம் உதவியளிக்கும் கடமை கவர்ன்மெண்டிற்கு ஏற்பட்டிருக்கிறது.

கல்வி.

நாம் எவ்வளவு சீக்கிரத்தில் ஆண் பெண் முதலிய அனைவருக்கும் கல்வி கற்பிக்கிறோம் என்ப

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

தஞ்சை மகாநாடு.

"நான் நேரில் பார்த்தவை."

(நமது விசேஷ நிருபர்)

சாப்பாடு.

சென்ற மாதம் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் மந்திரிகள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதை தஞ்சை என். ஆர். சாமியப்பா எதிர்த்தார். அத்துடன் கட்சி நன்மையைக்கருதி வருடாந்தர கூட்டத்தைத்தானே தஞ்சையில் கூட்டுவதென்று கூறினார். அதன்படி மிக குறுகிய கால அளவில் தஞ்சையில் மகாநாட்டை கூட்டினார். மகாநாட்டிற்கு தஞ்சையில் உள்ள ஜில்லா போர்டு கட்டிடம், ராஜா சத்திரம், முனிசிபல், தாலூக்காபோர்டு, கட்டிடங்கள், பள்ளிக்கூடங்கள் இத்தகைய 9-இடங்கள் பிரதிநிதிகள் தங்குவதற்கும், இவையின்றி திரு. ராமனாதன் செட்டியார் மாளிகை உள்பட 13-மாளிகைகள் மகாநாட்டுக்கு விஜயம் செய்யும் தலைவர்கள் தங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோவை, நெல்லூர், இவ்விரண்டு மகாநாடுகளைவிட தஞ்சையில் அந்தந்த பிரதிநிதிகள் கேம்பிற்குசமீபத்தில் சாப்பாடு விடுதிகள் அமைக்கப்பட்டிருந்ததை பாராட்டாமலிருக்க முடியாது. மகாநாட்டு வரவேற்புக்கழகத்தை தூஷித்தும், மகாநாட்டை, நடத்தமுடியாது தடுத்த சிறப்புற்ற கிருஷ்ணா, கோதாவரி, சித்தூர், தெலுங்கு நாட்டு பிரதிநிதிகள் 9-ந்தேதி பகலில் சாப்பிட்டுவிட்டு அவர்களை அழைத்து வந்தவர்கள் சொன்னபடி ராமேஸ்வர யாத்திரை புறப்பட்டபோது மகாநாட்டு விடுதியிலேயே சித்திரான்னம் கட்டிக்கொண்டு சென்றார்கள் என்றால் மகாநாட்டார் பிரதிநிதிகளுக்கு சாப்பாட்டு வசதியில் எவ்வளவு முன்னேற்பாடாக சௌகரியம் செய்துகொடுத்தார்கள் என்பது நன்கு தெரியும். பிரதிநிதிகள் ஜாகையிலேயோ தலைவர்கள் ஜாகையிலேயோ சாப்பாட்டு சௌகரியத்தைப்பற்றி எவரும் சிறு குற்றமும் சொல்லமுடியாது.

பிரதிநிதிகள்.

ஆந்திர நாட்டுப் பிரதிநிதிகளே அதிகமாக விஜயமாகி இருந்தார்கள். தெலுங்கு நாடான நெல்லூர் மகாநாட்டுக்குசென்ற தமிழ் பிரதிநிதிகள் அவ்வளவுகூட தமிழ் நாட்டு மகாநாடான தஞ்சை மகாநாட்டுக்கு தமிழ் பிரதிநிதிகள் விஜயமாகவில்லை. இவர்களிலும் பெரும்பான்மையானவர்கள் சுயமரியாதை இயக்கத்தில் யீடுபட்டவர்களாகும். 12-தெலுங்கு ஜில்லாக்களில் கிருஷ்ணா, கோதாவரி, இவ்விரு ஜில்லா பிரதிநிதிகள் ஜாகையில் தினம் வேளைக்கு 1250-க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் சாப்பிட்டிருக்கிறார்கள். மிகுதி 10-ஜில்லாபிரதிநிதிகளும் 1500-க்கு உட்பட்டே இருக்கும். தமிழ் நாட்டின் 13-ஜில்லாக்களிலிருந்தும், கேரளத்திலிருந்தும் வந்தவர்கள் மொத்தம் 500க்கு உள்பட்டவர்களே. இவர்களில் கனம் குமாரசாமி ரெட்டியார் தலைமையில் 76 பேர்களும் திரு. எல்லப்ப செட்டியார் தலைமையில் 43-பெயர்களும் வந்தார்கள். இவர்கள் முன்னதாகவே தெரிவிக்காததினால் டிக்கட் கொடுக்கப்படவில்லை. பின்பு ஓர் ஜில்லாபோர்டு தலைவர் சிபார்சின் மீது கொடுக்கப்பட்டது. மகாநாட்டுக்கு விஜயமான சுயமரியாதைக்காரர்களை விலக்கி கணக்கிட்டால் தெலுங்கர் 1800 பெயரில் 800 பேர் பொப்பிலி ராஜாவை ஆதரிப்பவர்களும் தமிழ் நாட்டில் தலைவர்கள் உள்பட 150 பெயருமே தமிழ் பிரதிநிதிகளாகும்.

வரவேற்புக்கழகம்.

தஞ்சை மகாநாட்டைக்கூட்டியவர்கள் பெரும்பாலும் தற்போதைய நாட்டு நிலைமை, பொதுஜனபோக்கு, பெரும்பான்மையான பிரதிநிதிகள் வந்தால் அதுவும் கட்டுப்பாடற்ற கலகத்தை விளைவிக்கும் நோக்கமுடைய முரட்டுப்பிரதிநிதிகள் வந்தால் அவர்களை சரிபடுத்திக்கொண்டு போகக்கூடிய திறமை இல்லாதவர்களாகவே காணப்பட்டார்கள். தோழர்கள் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் எம். எல். சி., ரெத்தினவேல் தேவர் திருச்சி நகரசபைதலைவர் கோவை ஜில்லா போர்டு தலைவர் திவான்பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் இவர்களே தலைவர்களில் பிரதிநிதிகளுடன் அடிக்கடி சந்தித்து சமரசத்தைவளர்க்கமுயன்றவர்களாகும். வரவேற்புகமிட்டியார். குறித்தகாலத்தில் ஊர்வலத்தை நடத்தி, மகாநாட்டையும் ஆரம்பித்திருந்தால், இரண்டாம் நாள் அவசரத்தில்செய்த மோசமான நிலைகள் நிச்சயம் ஏற்பட்டிருக்காது. அத்துடன் பிரதிநிதிகள் டிக்கட்டுகளை தாராளமாக வழங்கி இருக்கவேண்டும் முக்கியமான பிரச்சினையைபற்றி "ஓட்" எடுக்கப்படும் போதெல்லாம் ஜில்லாவுக்கு ஒரு ஓட்டுதான் ஆதலால் கிருஷ்ணா, கோதாவரி கதர் பக்தர்களைகண்டு மிரண்டு எல்லா பிரதிநிதிகளுக்குமே முன்னதாக டிக்கட் கொடுக்கப்படாதது. வரவேற்புகழகத்தின் பெறும் குற்றமாகும்.

ஆயினும் மற்றமகாநாடுகளில் பிரதிநிதிகள் டிக்கட் காட்டினால்தான் சாப்பாடு வழங்கப்படும். அதற்கென பிரத்தியோக டிக்கட்டுகளுமுண்டு இவைகளெல்லாம் இல்லாமலே 7 ந் தேதியே வந்துவிட்ட 500, 600 பிரதிநிதிகளிலிருந்து 9 தேதி காலை வரையில் சாப்பாடுபோட தாராள ஏற்பாடு செய்தவர்கள் பிரதிநிதிகள் டிக்கட்டை வழங்காததுநல்லெண்ணத்துடன் இழைத்த முட்டாள்தனமான செய்கையாகும். அத்துடன் 3000 பிரதிநிதிகளிடமிருந்து வரவேண்டிய 6000த்துக்கு மேற்பட்ட ரூபாய் நஷ்டத்திற்கும் ஆளாக நேர்ந்தது. இதற்கடுத்தது 2000ம் பேர்க்குக்கூட கஷ்டமாகஇருக்கக்கூடிய மகாநாடுக்கொட்டகையை மகாநாட்டிடமாக அமர்த்தியதாகும். ராஜா பொப்பிலி தலைமையில் 400க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வருவார்கள் என்பதை தெரிந்த வரவேற்பு கமிட்டி எதிர்கக்ஷியும் இதற்கு மூன்று மடங்கு அதிகம் கொண்டு வருவார்கள் என்பதை உணர்ந்து வேறு பெரிய கொட்டகைக்கு இடம் மாற்றியிருக்க வேண்டும். இந்தவருடமகாநாட்டு நிர்வாகிகளில் ஒரு முக்கியஸ்தரின் அலக்ஷிய புத்தியும் கொட்டகை போட்டால் சிலவாகுமென்ற அற்புபுத்தியுமே யாகும்.

வாலண்டியர்.

தஞ்சை மகாநாட்டில், மகாலிங்கம் பிள்ளை என்றவர் கேப்டன் என்று பத்திரிகையில் படம்கூட வந்தது. ஆனால் சாதாரணமாக ஓர் ஜில்லா மகாநாட்டுக்கு இருக்ககூடிய சரியான வாலண்டியர்கள்கூட இம்மாகாண மகாநாட்டிற்கு இல்லை. 7-ந்தேதி இரவு பிரதிநிதிகளை அழைக்க ஆள் போகவேண்டுமென்று — வரவேற்பு தலைவர்—கேப்டனிடம் சொன்னபோதுஅவர் கூறியமோசமானபதிலை எந்த சின்ன மனிதரிடமும் எதிர்பார்க்கமுடியாது. வாலண்டியர்கள் ஓர் 50 பேர்கள்கூட இல்லை அதிலும் 20 வயதுக்கு மேல்படாத பள்ளி சிறுவர்களாகும். அவர்களில் ஒருவருக்கும் தெலுங்கு தெரியாது. "பிரசாத்" என்ற ஒரு மனிதர் மொழி பெயர்ப்பாளராக ஒரு தெலுங்கு கேம்பில் இருந்தார். நல்ல வாலண்டியர்கள் மட்டும் இருந்திருந்தால் "குழப்பம்" என்ற சப்தமே இல்லாது செய்திருக்கமுடியும். இதுவும் வரவேற்பு கழகம் தனது அலக்ஷியத்தால் செய்த தவறுதல்களில் ஒன்று. அவர்கள் இது வரை அபிப்பிராய பேதத்துடன் வரும் ஏராளமான பிரதிநிதிகளின் மகாநாட்டை நடத்தியறியாதவர்களாகும். ஆனால் இச்சிறு தவறால் பார்ப்பனரல்லாத சமூகத்துக்கு நேர்ந்தஅவமானம் அளவிடமுடியாதது ஆகும்.

தெலுங்கர்கள்

ஆந்திரநாட்டு பிரதிநிதிகள் அதிகம், ஆனால் இருகக்ஷியினரான, 1800 பெயர்களில் 800 பெயர்கள் கிருஷ்ணா, கோதாவரி, ஜில்லாவாசிகளாகும். மற்ற 10 ஜில்லாக்களிலிருந்துவந்த ஆந்திரபிரதிநிதிகளில் கனம் ராஜாபொப்பிலிக்கு விரோதமானவர்கள் அத்தனைபேறும் 300—400 பெயர்கள் ஜில்லாபோர்டு கட்டிட ஜாகையான கிருஷ்ணா பிரதிநிதிகள் இருக்குமிடமே புறப்பட்டு அங்கு தங்கினார்கள். இந்த 1200 க்கு மேல் பட்டவர்களில் முக்கால்வாசி பிரதிநிதிகள்—சிகப்பு புதுகதர் துணிகளுடனும் காந்தி குல்லாய்களுடன் இருந்தார்கள்.

காஞ்சிபுரம் மகாநாட்டுக்கு எஸ். சீனிவாச ஐயங்கார் சென்னை சோம்பேரிகளை பிடித்து புதுசோமன் சொக்காய்—குல்லாய்—கொடுத்து பஸ்ஸுகளில் கொண்டுவந்ததை போலவே, தெலுங்கு பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இவர்கள் அத்தனை பேருக்கும் ஒரு விஷயம் போதிக்கப்பட்டிருந்தது. அதாவது ஜமீன்தார் பில்வருகிறது. அதில் முனிசாமி நாயுடு ஜமீன் குடிகளுக்கு சாதகமாக இருக்கிறார். அதற்காகத்தான் ஜமீன்தார்கள் முனிசாமிநாயுடுவை ஜஸ்டிஸ் கக்ஷிதலைவர் பதவியிலிருந்து தள்ளிவிட்டு பொப்லிராஜாதானே கக்ஷிதலைவராகவந்து ஜமீன்குடிகளுக்கு பாதகமாகவும், ஜமீன்தார்களுக்கு சாதகமாகவும், செய்து கொள்ளப்போகிறார். என்று கற்பிக்கப்பட்டிருந்தார்கள். மற்றும் சிலருக்கு இந்த ஜமீன்தார் பில்கதையுடன் தஞ்சைக்குப்போய்விட்டு அப்படியே ராமேஸ்வரம் சமீபத்தில் இருக்கிறது அங்குசென்றுவிட்டு வரலாம் என்றும் கூறப்பட்டு அழைத்துவந்தவர்களாகவே காணப்பட்டார்கள்.

ராஜாபொப்லி கக்ஷியில் உள்ள தெலுங்குதலைவர்கள் எதிர்கக்ஷி பிரதிநிதிகள் தங்கிஇருக்கும் ஜாகைக்குச் சென்று, அபிப்பிராயபேதத்துக்கு காரணம் விசாரிதது அதைஒழிக்க முயன்றிருந்தால் இப்பிரதி நிதிகள் அட்டகாசம் சிறிதுமே தலைகாட்டியிராது.

கலகக்காரர்கள்

அத்துடன் மிகதுக்ககரமான நமது தமிழ்நாட்டின் மனோநிலை மிக மானக்கேடானதாகும். பிரஸ்தாப கக்ஷிகளுடன் சண்டையிடச்செய்துவிட்டு "செட்டிநாட்டு ராஜா" ஜஸ்டிஸ்கக்ஷி தலைவராகவர தீவிரமுயற்சிகள் நடந்தது. இதில் பங்கெடுதத பிரதிநிதிகள் பெரும்பாலும் ராமனாதபுரம் ஜில்லாபிரதிநிதிகளேயாகும். இதில்அரும்பாடுபட்ட 3—4—தலைவர்களைப்பற்றியும், செட்டி நாட்டு பெரிய ராஜாவும்—இளையராஜாவும் இதில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைப்பற்றியும் பின்பொரு முறை விளக்கமாக கூறுகிறேன். இக்கலகக்காரர்களை யாராவது கண்டித்திருந்தால் மகாநாடு ஒருஅளவாவது சிறப்பாக நடந்தே இருக்கும்.

இம்மாகாண பத்திரிக்கைகள் மகாநாட்டு சம்பவங்களை கூறுமிடத்தி

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க

குடி அரசு.

ஈரோடு 1932அக்டோபர்மீ 16-உ

ஜஸ்டிஸ் கட்சி கொலை செய்யப்படுமா?

—:0:—

சென்ற வாரத்தில், தஞ்சையில் கூடிய பன்னிரண்டாவது பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் நடந்த மானக்கேடான காரியங்களைக் கேட்ட எந்தப் பார்ப்பனரல்லாதாரும், பார்த்த எந்தப் பார்ப்பனரல்லாதாரும் வெட்கமடைந்து தலையைத் தொங்கவிட்டுக்கொள்ளாமலிருக்க முடியாது. தேசத்தின் நன்மைக்காக உழைக்கின்றோம் என்றும், சமூகத்தின் நன்மைக்காக உழைக்கின்றோம் என்றும் சொல்லிக்கொண்டிருக்கும், படித்த கூட்டத்தாரும், பணக்காரக்கூட்டத்தாரும், ஆகிய பார்ப்பனரல்லாதார்களே சாதாரண முரட்டு, அறிவற்ற காலிகளைப்போல் ஒருவரோடு ஒருவர் மோசமாக நடந்துகொண்ட நடத்தையை நினைக்கும்போது உண்மைப்பார்ப்பனரல்லாதார் இரத்தம் கொதிக்காமலிராது. பார்ப்பனரல்லாதார் கட்சியைஎப்படியேனும் குழிதோண்டிப்புதைத்துவிட வேண்டுமென்று வெகு நாட்களாக முயற்சி செய்து கொண்டிருந்த பார்ப்பனர்களும், பார்ப்பனக் கூலிகளும் சந்தோஷப்பட்டுத் தலை கால் தெரியாமல் கூத்தாடவும், பார்ப்பனரல்லாதாரின் சமூக நலத்தைப்போதிய அளவு கவனிக்காவிட்டாலும் ஏதோ பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்காக உழைப்பதாகச் சொல்லிக்கொண்டாவது ஒரு கட்சி இருக்கிறதே என்று நினைத்துக்கொண்டிருக்கின்றவர்களின் நெஞ்சந் துடிக்கவும் ஆன காரியங்கள் நடந்ததைப்பற்றி நினைக்கும் பார்ப்பனரல்லாதார் எவரும் ஆத்திரமடையாமலிருக்க முடியாது. ராஜாக்களும், மந்திரிகளும், ஜமீன்தாரர்களும், ஜில்லா போர்டுத் தலைவர்களும், தாலூகா போர்டுத் தலைவர்களும், முனிசிபல் தலைவர்களும், சட்டசபை உறுப்பினர்களும், வியாபாரிகளும், பணக்காரர்களும், நிலச்சுவான்தார்களுமாகிய பார்ப்பனரல்லாதார்கள் ஒன்று கூடிய ஒரு மகாநாடு குழப்பத்தில் நடந்ததென்றால் இதைவிடப் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு அழியாத, வெட்கங்கெட்ட வசைமொழி வேறு என்னதான் வேண்டும்? மேலே கூறிய பெரிய மனிதர்கள் என்று சொல்லக்கூடிய பார்ப்பனரல்லாதார்களே ஒரு மகாநாட்டைச் சமாதானத்தோடு நடத்த யோக்கியதை இல்லாமற் போய்விட்டார்களென்றால், "பார்ப்பனரல்லாதார்க்கு மூளையில்லை: திறமையில்லை" என்று நினைத்துக் கொண்டும், சொல்லிக்கொண்டு இருக்கும் பார்ப்பனர்களுக்குத் தகுந்த பதில் கூறப் பார்ப்பனரல்லாதார்க்கு வாயுண்டா என்று தான் கேட்கின்றோம்.

தஞ்சை மகாநாட்டில் எந்தக் கட்சியினர் செய்தது சரி, எந்தக் கட்சியினர் செய்தது தப்பு என்பதைப்பற்றி நாம் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனால் எந்தக் கட்சியினராயிருந்தாலும், கூட்டத்தைக் கலைப்பதற்கென்றும், மகாநாடு நடைபெற வொட்டாமல் சத்தம் போடுவதற்கென்றுமே ஒரு கூட்டத்தை மகாநாட்டுப் பிரதிநிதிகளாக்கிக் கொண்டு வந்ததைவிட வெறுக்கத்தகுந்ததும், கண்டிக்கத்தகுந்ததுமான காரியம் வேறில்லை. அதிலும், சத்தம் போடு என்றால் சத்தம் போடவும், பேசாமலிரு என்றால் பேசாமலிருக்கவும் ஆன மக்களையும், வேறு அறிவோ, படிப்போ ஒன்றுமில்லாத மக்களையும் பிரதிநிதியாக அழைத்துக்கொண்டு வந்திருந்ததாகச் சொல்லப்படும் விஷயம் இன்னும் கேவலமாகும். அன்றியும், ஜஸ்டிஸ் கட்சியைத்தொலைக்கவேண்டும் என்னும் எண்ணமுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், எப்படியாவது ஜஸ்டிஸ் கட்சியில் பிளவு உண்டாக்கி அதை அதிகாரப்பதவியிலிருந்து வீழ்த்தி, அவ்வதிகாரத்தைத் தாங்கள் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்னும் நோக்கமுடைய இதர கட்சியினரும்மகாநாட்டுக்குப் பிரதிநிதிகள் என்ற பெயருடன் வந்திருந்தது வியப்பைத்தரக்கூடிய செய்தியாகும். இத்தகைய பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு மகாநாடு எப்படி ஒழுங்காக நடக்க முடியுமென்றுதான் கேட்கிறோம். இம்மாதிரியான மக்களை மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளாக அழைத்து வந்தவர்களும், அழைத்துவர உதவி செய்தவர்களும், அவர்களைப் பிரதிநிதிகளாக ஒப்புக்கொண்டு அனுமதித்தவர்களும், யாராயிருந்தாலும் சரி அவர்கள் செய்கை மிகவும் கண்டிக்கக்கூடியதும், இகழக்கூடியதும், பரிகசிக்கக்கூடியதும் ஆகுமென்றே நாம் கூறுவோம்.

உண்மையிலேயே ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள் அனைவரும், பார்ப்பனரல்லாத ஏழை மக்களுக்கும், தேசமக்களுக்கும் நன்மை செய்யவேண்டும் என்னும் எண்ணமுடையவர்களாயிருந்தால்அவர்களுக்குள் இத்தகைய குழப்பமும் கலகமும், காலித்தனமும் நடந்திருக்க இடமே ஏற்பட்டிருக்காது. இதற்கு மாறாகக் கட்சித்தலைவர்கள், கட்சியின் பெயரால் பட்டம் பதவிகளைப்பெற்றுச் சுயலாபம் பெறுவதில் பிடிவாதமுடையவர்களாகவும், இவ்விஷயத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காதவர்களாகவும் இருந்த காரணத்தால் தான் இவ்வாறான கலகம் நேர்ந்தது. சுருக்கமாகக் கூறவேண்டுமானால் மந்திரி உத்தியோகத்தின் பொருட்டு தான் மகாநாட்டில் இம்மாதிரியான மானக்கேடு சம்பவித்தது என்று சொல்லிவிடலாம். இதன் பொருட்டே ஒவ்வொருவரும் கூலிக்கு ஆள்பிடித்துப் பிரதிநிதிகளாகப் பலரைக்கொண்டுவர நேர்ந்தது என்பதிலும் சிறிதும் சந்தேகப்பட வேண்டியதில்லை.

நெல்லூர் மகாநாட்டுக்குப்பின் சென்ற மூன்று ஆண்டுகளாக மகாநாடு கூடாமல் இருந்ததே அக்கட்சித்தலைவர்களுக்குக் கட்சி முன்னேற்றத்திற் கவலையிருக்கிறதா? அல்லது தங்களுடைய சுயநலமுன்னேற்றத்தில் கவலையிருக்கிறதா? என்பதைக் காட்டுவதற்குப் போதுமானதாகும்.

அன்றியும் தற்காலத்தில் அக்கட்சியில் உள்ளவர்களில் பலர், சுயநலத்தை உத்தேசித்துக்கட்சியின் அடிப்படையான கொள்கையையே மாற்றிக் கட்சியையே கொலை செய்யச் சில வருஷங்களாக முயன்று கொண்டிருக்கிறார்கள். இத்தகைய பார்ப்பனரலலாத சமூகக்கொலைகாரர்களும் தஞ்சை மகாநாடு கலகத்தில் முடிந்ததற்கு ஒரு வகையில் காரணகர்த்தர்களாவார்கள் என்பதையும் மறுக்க முடியாது. அதாவது, பார்ப்பனரல்லாதார் கட்சியை ஆரம்பித்த ஆதிகர்த்தர்களாகிய, திரு. டி. எம். நாயர் அவர்களும் சர். பி. தியாகராயர் அவர்களும், பார்ப்பனர்களால் மிதியுண்டு, தாழ்த்தப்பட்டுக் கிடந்த பார்ப்பனரல்லாதார் சமூகத்தை அரசியல் துறையிலும், சமுதாய முன்னேற்றத்துறையிலும் சமவுரிமையடையும்படி செய்யவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே கட்சியை ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொண்டு தேச நன்மைக்கென்றோ, ஏழைகளின் நன்மைக்கென்றோ ஆரம்பித்த எந்த இயக்கங்களும், சங்கங்களும், கடைசியில் பார்ப்பனர்களின் சுயநலத்திற்கே உபயோகப்படும்படி பார்ப்பனர்கள் செய்து வந்த தந்திரமாகிய அயோக்கியத்தனத்தை ஜஸ்டிஸ் கட்சி ஸ்தாபகர்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள். ஆகையினால், பார்ப்பனரல்லாதார் கட்சியானது அழியாமல் நிலைத்து நின்று, பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்குச் சிறிதளவாவது நன்மைசெய்ய வேண்டுமானால் அக்கட்சியில் பார்ப்பனர்களைச்சேர்த்துக்கொள்ளக்கூடாது என்ற திட்டத்தை அமைத்து வைத்தார்கள். இனியும் பார்ப்பனரல்லாதார் கட்சி சாவாமல் உயிரோடு இருக்க வேண்டுமானால், கட்சி ஸ்தாபகர்களின் நோக்கத்தையும் திட்டத்தையும் கொலைசெய்யாமலிருக்க வேண்டியதே பார்ப்பனரல்லாதார் கடமையாகும்.

தஞ்சை மகாநாட்டிலோ, ஒரு கூட்டம், கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்ப்பதாகத் தீர்மானித்துவிடவேண்டும் என்பதற்காக வெகு கஷ்டப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், தஞ்சை மகாநாட்டின் பெரும்பாலான பிரதிநிதிகள் பார்ப்பனரைக் கட்சியில் சேர்ப்பதற்கு எதிரான மனப்பான்மையுடையவர்களாக இருந்தார்களென்ற விஷயம் பார்ப்பனரைச் சேர்க்கும் எண்ணமுடைய கூட்டத்தார்க்குத் தெரியும். ஆகையால் இவர்களும், மகாநாடு சரியாக நடைபெறாமல் போவதற்கு வெளிப்படையாக இல்லாவிட்டாலும், மறைமுகமாகப்பல யோக்கியமற்ற செயல்களைச் செய்து வந்தார்களென்று சொல்லப்படும் விஷயத்தையும் எளிதில் மறுக்க முடியாது.

அடுத்தபடியாகத் தலைவர் தேர்தல் விஷயமும் கலகத்திற்கு ஒரு முக்கியமான காரணமாகி விட்டது. தலைவர் தேர்தல் விஷயமும், தற்கால மந்திரிகளின் உத்தியோக விஷயத்தில் மாறுதலை உண்டாக்குமோ என்ற பயம், மந்திரிகளிடத்திலும், மந்திரிகளின் பாதந்தாங்கிகளிடத்திலும் குடி கொண்டிருந்த காரணமே கலகத்திற்கு முக்கிய காரணம் என்று சொல்லப்படுகின்றது. சில மாதங்களாக மந்திரிகளுக்குள் ஒற்றுமையில்லாதிருந்த விஷய

மும், தென்னிந்திய நலவுரிமைச் சங்க நிர்வாக சபையில் மந்திரிகளின் மேல் நம்பிக்கையில்லை என்னும் தீர்மானம் கொண்டுவரப்பட்டுப் பிறகு சமாதான விஷயமும், தஞ்சை மகாநாட்டுக்குவந்த தலைவர்கள் இருகட்சியினராக ஒவ்வொரு கட்சிக்கும் தனித்தனியே ஆள் பிடித்துக்கொண்டு வந்த விஷயமும், மந்திரிகளின் உத்தியோக விஷயமே கலகத்திற்கு முக்கிய காரணம் என்பதை நன்றாய் விளக்கிக் காட்டுகின்றன.

ஆகவே ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள், சுயநலத்தை முன்னிட்டு யோக்கியப் பொறுப்பில்லாமல் நடந்து கொண்ட காரணத்தினால், பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு நீங்காத பழியுண்டாகும்படி மகாநாடு குழப்பத்தில் நடந்து, தலைவர் பிரசங்கத்தோடு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. இனி ஒத்திவைக்கப்பட்ட மகாநாட்டை நாள் கடத்தாமல், அந்தத் தஞ்சையிலேயே நடத்திக் கட்சியைக் கொலை செய்யாமல் கட்சியின் முன்னேற்றத்திற்கான வழிகளைக்காண்பார்களாயின் அப்பொழுதுதான் இப்பொழுது ஏற்பட்டுள்ள அவமானத்திற்கு ஓரளவு பரிகாரம் தேடியதாகும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இவ்வாறு மகாநாட்டை மீண்டும் நடத்த ஆரம்பிக்கும் பொழுது, தற்போது மகாநாடு குழப்பத்தோடு முடிந்ததற்குக் காரணமான தலைவர் தேர்தல் பிரச்சினைத்தகராறும், பார்ப்பனரைச்சேர்க்கும் பிரச்சினைத் தகராறும் முதலில் நிற்கும் என்பதில் ஐயமில்லை. ஆகையால், எவ்வித கலகமும் நடப்பதற்கு இடமில்லாத ஏற்பாடுகளுடன் மகாநாட்டை ஒழுங்காக நடத்துவதில் கட்சித் தலைவர்கள் பெரிதும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இச்சமயத்தில் நாம் மேற்கூறிய தலைவர் தேர்தல் பார்ப்பனரைச் சேர்த்தல் ஆகிய இரண்டு விஷயங்களைப்பற்றி கட்சியின் அபிவிருத்தியின் பொருட்டு நமது அபிப்பிராயத்தைக் கூறிவிட விரும்புகிறோம். கட்சித்தலைவர் யார் வருவதாயிருந்தாலும் அதைப் பற்றி நமக்குக்கவலையில்லை; கட்சித்தலைவர் விஷயத்தில் ஆந்திரர்; தமிழர்; ஜமீன்தார், ஜமீன்தார் அல்லாதவர், நாயுடு, முதலியார் முதலிய வகுப்புத்துவேஷங்களைக் கிளப்பி விடுவது வடிகட்டின முட்டாள் தனமும் பொறுப்பற்ற தன்மையும் என்றே நாம் கூறுவோம். யாராயிருந்தாலும் கட்சியின் அபிவிருத்தியில் நோக்கமுடையவர்களாகவும், எதிர்க்கட்சிக்காரர்களைச் சமாதானம்பண்ண வேண்டும் என்னும் எண்ணத்துடன் கட்சிக்கொள்கையை விட்டுக்கொடுக்காதவர்களாயும், சுயநலத்தைக்கருதாதவர்களாயும் கட்சியின் அடிப்படைநோக்கமாகிய சமுதாயச்சீர்திருத்தம் அரசியல் முன்னேற்றம் இரண்டையும் ஒருங்கே நிறைவேற்றக் கூடியவர்களாயும் இருத்தல்வேண்டும் இத்தகைய ஒருவரைத் தேர்ந்தெடுத்தாலொழிய ஜஸ்டிஸ் கட்சி நிலைத்து நிற்காதென்பதை நாம் மிகவும் உறுதியோடும், உண்மையோடும் அறிவிக்கின்றோம். அடுத்தபடி பார்ப்பனரைச்சேர்க்கும் விஷயத்தில் கட்சியினர் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சில பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியை வகுப்புவாதக் கட்சியென்றும், அரசியல் கட்சியல்லவென்றும், தேசத்தின் பிரதிநிதித்துவம் பொருந்திய கட்சியல்லவென்றும் கூறுகின்றார்களென்று சொல்லிக்கொண்டு கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்க்க முயற்சிப்பது கட்சியைக்கொலை செய்துவிட்டுத் தாம் தேசாபிமானப்பட்டம் பெறுவதற்கும் எதிரிகளாகிய பார்ப்பனர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கும் செய்யப்படும் சூழ்ச்சியேயாகும். இவ்வாறு கூறுகின்றவர்களின் புத்தியில் பார்ப்பனர்களின் வகுப்புவாதமும், சுயநலமும், இன்னும் ஒழியவில்லை என்னும் விஷயம் படவில்லையா என்று கேட்கிறோம். இதுவரையிலும் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொண்டிருக்கின்ற எந்த இயக்கமாயினும் எந்தச்சங்கமாயினும், தாழ்த்தப்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாதார் நிலையை உயர்த்தச் சிறிதளவாவது உதவி செய்திருக்கின்றனவா? என்பதை நன்றாய் யோசனை செய்து பார்க்கவேண்டுகிறோம். இப்பொழுதுள்ள ஜஸ்டிஸ்கட்சியானது எவ்வளவுதான் பார்ப்பனர்களின் வசைமொழிகளுக்கு உட்பட்டிருந்தாலும் உண்மையில் தேசமக்களுக்கு நன்மை செய்யும் கட்சியென்பதை தேசமக்கள் ஒப்புக்கொண்டதற்குஅறிகுறியாக மூன்றுமுறை தேசமக்களின் ஆதரவைப்பெற்று அதிகமான உறுப்பினர்கள் சட்டசபைக்கும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். இக்கட்சி அரசாங்கத்தாராலும் ஒரு அரசியல் கட்சியென அங்கீகரிக்கப்பட்டு அதிகாரப் பதவியிலும் இருந்து வந்திருக்கின்றது. இப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே பார்ப்பனரைச் சேர்க்காத காரணத்தால் கட்சியின் எந்தக்காரியம் தடைப்பட்டுவிட்டது என்று கேட்கின்றோம்.

ஒருக்கால் இனி கூடப்போகும் மகாநாட்டில் பார்ப்பனர்களையும் கட்சியில் சேர்ப்பதென்று தீர்மானிப்பார்களாயின் அப்பொழுதே கட்சியின் ஆயுட்காலம் முடிந்துவிட்டது. திரு. டி. எம். நாயர் அவர்களாலும் சர். தியாகராயராலும்பனகால்அரசராலும் தோற்றி வளர்க்கப்பட்ட கட்சியை அவர்களுக்குப்பின் வந்த சுயநலங்கொண்ட தலைவர்கள் கொலை செய்தார்கள் என்ற பழியை ஏற்காமல் போக முடியாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

இவ்வாறு பார்ப்பனர்களையும் கட்சியில் சேர்க்கப்பட்டுக் கட்சியும் குழிதோண்டிப்புதைக்கப்பட்டு அழியக்கூடிய காலம் வந்தாலும் அதனால் பார்ப்பனரல்லாதார் ஊக்கமும் உணர்ச்சியும் பாழாகப்போய்விடாது என்று நாம் நிச்சயமாக நம்புகின்றோம். மீண்டும் பழயகொள்கையையுடைய அதாவது பார்ப்பனர் சம்பந்தமில்லாததும் சமுதாய சீர்திருத்தக்கொள்கையையும் அரசியல் முன்னேற்றத்தையும் அடிப்படியாகக்கொண்ட ஒரு சுத்தமான பார்ப்பனரல்லாதார் கட்சி தோன்றாமல் போகாதென்பதும், தப்போதுள்ள ஜஸ்டிஸ் கட்சியைக்கொலை செய்வதற்கு முனைந்து நிற்கும் துரோகிகளைப் பொது வாழ்விலிருந்து விரட்ட அவர்கள் பின்வாங்கமாட்டார்களென்பதும் நிச்சயம் என்று உறுதியாகக் கூறுகின்றோம்.

ஆகையால் தற்போதுள்ள ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள பொறுப்பாளிகள் உண்மையிலேயே பார்ப்பனரல்லாதார் சமூக நலத்தைக் கருதக்கூடியவர்களாயிருந்தால், பார்ப்பனரல்லாத சமூகத்தாரால் சமூகத்துரோகிகள் என்ற பழியைச்சுமக்க மனமில்லாதவர்களாகஇருந்தால், சுயநலமின்றிக்கட்சியின் முன்னேற்றத்தில் விருப்பமுடையவர்களாயிருந்தால், திரு. டி. எம். நாயர்காலத்திலும் சர் தியாகராயர் காலத்திலும் பனக்கால் அரசர்காலத்திலும் இருந்த உண்மையான பார்ப்பனரல்லாதார் கட்சியை மீண்டும் உயிர்ப்பிக்கவேண்டுகின்றோம்.

ஈரோட்டில் கூட்டம்

மந்திரிகள்மீது கண்டனம்.

சென்ற 13—10—82 ந்தேதி தென்னிந்திய நல உரிமைச்சங்கத்தின் கூட்டம் திரு. எம். சிக்கய்யா அவர்கள் தலைமையில் கூடியது. பல பார்ப்பனரல்லாத பிரமுகர்களும், தஞ்சை மகாநாட்டுப்பிரதிநிதிகளும் விஜயம் செய்திருந்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின. சென்னை அரசாங்க மந்திரிகள், தங்கள் உத்தியோகத்திற்கு ஆபத்துவருமென்பதை உத்தேசித்து, தஞ்சைமகாநாடு சரிவர ஒழுங்காய் நடைபெறாது குழப்பத்தில் முடியக்காரணமாயிருந்த அவர்களது செய்கையைக்கண்டிக்கிறது.

(2) பொது நலத்தை புறக்கணித்து, சுயநலங்கருதி, தங்களுக்கு அனுகூலமான கதர் உடுத்தியபிரதிநிதிகளை அழைத்துவந்து மகாநாட்டை குலைத்ததால் முதல்மந்திரியின் மீதும், மூன்றும் மந்திரியின் மீதும் நம்பிக்கை இல்லை எனத்தீர்மானிக்கிறது.

(3) மகாநாட்டிற்குத் தலைமை வகித்த பொப்லி ராஜா தலைவர் என்பதை ஒப்புக்கொள்வதோடு, பொப்லி ராஜா அவர்கள் தலைவர்களைக்கலந்து கட்சியை ஒழுங்குபடுத்தி அமைக்குமாறுவேண்டிக் கொள்கிறது.

ஈரோடு முனிசிபாலிடி நோட்டீஸ்.

ஈரோடு முனிசிபல் சங்கத்தார், ஜனுப் எம். கே. முகமது இப்ருஹீம் சாஹெப் பகதூர் அவர்களுக்கு, ஷையாரால் பூந்துறை ரோட்டில் டி. ச. 1328—B நெம்பரின் முன் டி. ச. 1630 நெம்பரில் ஆக்ரமிப்பு செய்துள்ள 4514 சதுர அடி நிலத்தை வருஷம் ஒன்றுக்கு ரூ. 5-0-0 வாடகை வீதம் 3-வருஷத்துக்கு குத்தகைக்குக்கொடுப்பதாக 30—9—32 தேதிய 303—3 நெ. தீர்மானத்தில் முடிவு செய்திருக்கிறார்கள்.

இது விஷயமாய் ஆக்ஷேபணையுள்ளவர்கள் ஈரோடு முனிசிபல் கவுன்சில் சேர்மன் அவர்களுக்கு எழுத்து மூலமாய் இந்த நோட்டீஸ் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்த ஒரு மாதத்திற்குள் தெரியப்படுத்திக் கொள்ளவேண்டியது.

கே. ஏ. ஷேக்தாவுத்,
சேர்மன்.

மதுரையில்
குடி அரசு
கிடைக்குமிடம்.
எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி
மதுரை.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

லெல்லாம், செட்டிநாட்டு ராஜாவந்தார் என்னும் போதெல்லாம் மகாநாட்டில் க்ஷேம்! சத்தம்இல்லை என்று குறிப்பிட்டதே கலகக்காரர் சக்தியை ஒரு வாரு உணரலாம்.

முதல் தினம்.

8-ந்தேதியன்று பிற்பகல் 3-மணிக்கு மகாநாடு ஆரம்பமென்று போட்டு இருந்தது. ஆனால் 2-45-க்கு மகாத்மாவுக்கு ஜே! என்ற கோஷத்துடன் மகாநாட்டு சுவரேறி குதித்தும், கேட்டை உடைத்துக்கொண்டும் பிரதிநிதிகள் சென்றார்கள்என்று எல்லாதினசரிகளிலும் படித்திருக்கலாம். இவர்கள் காந்தி பக்தரான கனம் முனிசாமி நாயுடுகார் அவர்களின் சகாக்கள் என்பது சகலருக்கும்தானே விளங்கி இருக்கக்கூடும். மூன்றரை மணிக்கு கனம் முனிசாமி நாயுடு, குமாரசாமி ரெட்டியார், செட்டிநாட்டு ராஜா ஆகிய பிரபலஸ்தர்கள் விஜயமானார்கள் என்றும், ஓர்போட்டி கூட்டம் பி. வி. கிருஷ்ணையா சவுத்திரி தலைமையில் நடக்கும் என்றார் ஒருவர், மற்றொரு தெலுங்கர் எழுந்து ஏதோ கூறினர், போட்டி கூட்டம் என்றார்,மற்றொருவர் இந்த நிலையில் இக்கூட்டம் கலைக்கப்பட்டது. அதன் பின் திரு. என். தண்டபாணி, திரு. என். பி. காளியப்பன் அவர்களால் பிரரேபணை செய்யப்பட்டு திரு. சிதம்பரம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் அதேமேடையில் நடந்தது. அது 3-30 லிருந்து இரவு 8-40 வரை நடந்தது. பாபம் இது இம்மாகாணத்திலுள்ள யோக்கியமான ஒரு பத்திரிக்கா நிருபருக்குக்கூட தெரியாதது ஆச்சர்யம்.

தமிழர் கூட்டம்.

3-30 மணிக்கு முன் 2000 ஜனக்கூட்டமுள்ள ஓர் கூட்டத்தில் 200 குள்பட்ட ஆந்திரர்கள் 10-நிமிடம் குழப்பத்தில் செய்த செய்கையை மறுதினம் எல்லா பத்திரிகைகளும் போட்டிக் கூட்டமென்றும், அதில் விஜயம் செய்த பிரபலஸ்தர்கள் பெயரையும் பிரம்மாண்டமான கொட்டை எழுத்தில் பொட்டிருந்தார்கள். தஞ்சை மகாநாடு குழப்பத்தில் முடிய இக்கூட்டத்தில் கலந்துகொண்ட சௌத்திரிகள், ரெட்டிகள், நாயுடுகள், இவர்களே காரணமாகும். இதன் பின்பு அதே இடத்தில் திரு. சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டமானது ஐந்து மணி நேரம் வரை நடந்தது. அதில் திருவாளர்களான முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல்., எஸ். குருசாமி பி, ஏ., எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி., என். தண்டபாணி, இந்திராணி பாலசுப்ரமணியம், நீலாவதி, கே. வி. அழகர்சாமி, என். பி. காளியப்பன், பண்டிட் திருஞான சம்பந்தம், முதலிய தலைவர்கள் ஐந்துமணி நேரத்திற்கதிகம் அக்கூட்டத்தில் உபன்நியாசம் செய்தார்கள். 2000 ஜனங்களில் 600, 700 பெயர்கள் அதிகம் தெலுங்கர்கள். திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் தெலுங்கில் உபந்நியாசித்தார்கள். இக்கூட்டமானது இரவு 8-30 மணிக்கு இனிது முடிந்தது.

மறுதினம்.

9-ந்தேதி காலையில் வழக்கம் போல் முதல்தினம் கேட்டை உடைத்த பிரதிநிதிகள் 7-30 மணிவரை கேட் திறக்கப்படாததினால் கேட்டை உடைத்து சென்றார்கள் என்று எல்லா பத்திரிகைகளிலும் படித்திருப்பீர்கள். (இரண்டாம் நாள் சாதாரணமாக பிரதிநிதிகள் எத்தனை மணிக்கு புறப்பட முடியும் என்பதையும், 7-30 க்குள் கேட் திறக்கப்படாதது ஓர் குற்றமா? என்பதையும் சற்று யோசித்துப்பார்த்தால் உண்மை புலனாகும்.)

சுவரேறி குதித்தவர்கள் டிக்கட் இல்லாதவர்கள், இவர்கள் 300, 400 பெயர்கள் இருக்கும் 8-மணிக்கு மகாநாட்டு வரவேற்பு கமிட்டியார் மகாநாடு ஆரம்பிக்க வேண்டியிருப்பதால் சுவரேறி குதித்துவந்த (முதல் மந்திரி கக்ஷியார்) தயவு செய்து வெளியே போகவேண்டுமென்றார்கள். யாரும் போகவில்லை, எதாவது இன்றும் கலகம் விளைவிக்க வேண்டுமென்பதே இவர்கள் நோக்கமென்றுணர்ந்த வரவேற்புக்கமிட்டி அவர்கள் போக மிகுதி பெயர்களை வழக்கப்படி வர செய்தார்கள். 9-30-மணிக்கு மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது.

10-30 மணிக்குள்ளாகவே வரவேற்பு கழக சொற்பொழிவு சுருக்கம், தலைவர் பிரரேபணை தலைவர் பிரசங்க சுருக்கம், கனம் பி. டி. ராஜன் ராஜா வெங்கிடகிரி இவாகளால் மகாநாடு ஒத்திவைக்கப்பட்டதாக சொன்னது, கனம் முனுசாமி நாயுடுவின் ஸ்டேண்டிங் இவைகள் முடிந்தது. அதன் பின்பு மேடைக்கு எதிரில் கீழே உட்கார்ந்திருந்த ஆந்திர பிரதிநிதிகள் மண்ணை வாரிஇறைத்தார்கள். உடனே மேடைமீதிருந்த மேஜை அவர்கள்மீது வந்து விழுந்தது. கீழே இருந்த ஒருவர் ஒரு செருப்பை (இடதுகால்) அக்கிராசனருக்கு குறிப்புபார்த்து எரிந்தார் அவர்மீது ஓர் நாற்காலி மேடைமீதிருந்து விழுந்தது. போன செருப்பு பக்கத்திலிருந்த கனம் முனுசாமி நாயுடுகார் அவர்கள் மீது விழுந்தது. கீழே இருந்த முனுசாமியின் பிரதிநிதிகள் மேடைமீது ஏறி ராஜா பொப்பிலியை தாக்கமுயன்றார்கள். ஆனால் அடி அவர்மீது விழாது காப்பாற்றப்பட்டார். இவர்களில் முக்கியஸ்தர்கள் டி. வி. சுப்பிரமணியம் முத்துசாமி வல்லத்தரசு எஸ். குருசாமி, டேவிஸ், பாலகிருஷ்ணன் இவர்களேயாகும். பின்பு இக்கூட்டத்தார்களே கனம் முனுசாமி நாயுடு அவர்களையும் மேடைமீதிருந்து வெளியே கொண்டுவந்து விட்டார்கள். அதன் பின்பு திரு. டேவிஸ், முத்துசாமி வல்லத்தரசு இவர்கள் சகாக்கள் ராஜா பொப்பிலி அவர்களை வெளியே கொண்டுவந்து ரோட்டில் தயாராக நின்ற கனம் குமாரசாமி ரெட்டியார் காரில் உட்காரவைத்து ராஜா சாகிப் ஜாகைக்குக் கொண்டுபோய் சேர்த்தார்கள்.

கண்டனக்கூட்டம்.

பிற்பகல் மூன்று மணிக்கு திருநெல்வேலி ஜில்லா பிரதிநிதிகள் ஜாகையில் திரு. வேதாசலம் பி. ஏ. பி. எல். தலைமையில் தமிழ் ஜில்லா பிரதிநிதிகளின் கூட்டம் நடந்தது. பின் அதில் இரண்டு மந்திரிகளையும் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாலை 5 மணிக்கு ராஜா சத்திரத்தில் திரு. முத்துசாமிவல்லத்தரசு பி. ஏ. பி. எல். தலைமையில் ஓர் பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் தோழர்கள் எஸ். குருசாமி பி. ஏ. எஸ். வி. லிங்கம், திருஞானசம்பந்தம்,நீலாவதி விசாலாக்ஷி எஸ். குஞ்சிதம் முதலியவர்கள் உபன்னியாசம் செய்தார்கள்.

மதுரை சுயமரியாதைச் சங்கம்.

—:—

இச்சங்கக் கட்டிடத்தில் இவ்வூர் "கல்ச்சர்கிளப்" ஆதரவில் 3-10-32 முதல் நான்கு நாட்களாக 'தற்கால பிரச்சினை' 'பயிற்சி' 'உணர்ச்சி' முதலியனபற்றி தோழர். எஸ். ஜி. தஸ்தகீர். ஏ. எல். ஆனந்தம், ஜெ. என். ராமனுதன், திருமங்கலம்-மணிமாறன், ஏ- எல். அருணாசலம் முதலிய தோழர்கள் பேசினார்கள்,

5—10—32 ந்தேதி நடந்த கூட்டத்தில் திருமங்கலம் — மணிமாறன் அவர்கள் மதஉணர்ச்சி ஒழியவேண்டியதன் அவசியத்தைப்பற்றியும், மூடநம்பிக்கைகளைப்பற்றியும், கடவுளின் கற்பனையைப்பற்றியும் பேசி உட்காருமுன் தோழர் ஜெ. என். ராமனுதன் அவர்கள் எழுந்து ஆஸ்தீகமே சிறந்ததென்றும், கடவுள் இல்லை என்றுசொல்லக்கூடாதென்றும், தான்பல புராணங்களைப்படித்திருப்பதாகவும் சொன்னதுடன் சுயமரியாதை தோழர்களைத்தாக்கியும் பேசினார். இதுகூட்டத்தில் குழப்பத்தை உண்டாக்கியது.

நான்கு நாட்களாக டாக்டர் எஸ். ஜி. தஸ்தகீர் அவர்கள் செய்த பிரசங்கத்தைப் புகழாதார்கிடையாது.

(ஒரு நிருபர்)

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

தலைவர்களுக்கு வரவேற்பளிக்கத் தீர்மானம்:—

9—10—32 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு ஷெசங்க வாராந்திரக் கூட்டமொன்று சங்கத்தலைவர் தோழர். எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் ஸ்தானத்தமர்ந்ததும் தோழர் என். கே. கஸ்தூரி அவர்கள் சுயமரியாதைக்கீதங்கள் மிக் இனிமையாகப்பாடினார். பின்னர் ஆசிரியர் தோழர் வெங்கடரத்தனம் அவர்கள் 'கல்வி' என்னும் பொருள்பற்றி ஒருசொற்பொழிவாற்றினார். அவரைத்தழுவி தோழர்கள் எச். எஸ். முனுசாமி, ஆர். கிஸன் ஆகியவர்கள் பேசினார்கள். தலைவர்முடிவுரையிலும் தற்காலம் கல்வி அளிக்கும் முறையாற்போதாறும் மூடநம்பிக்கைகளையும் அதனால் விளையும் கெடுதிகளையும், எச்செயலையும் அறிவால் ஆராய்ந்துசெய்ய, அதன்பயன் துய்க்க மன்பதைகளின் அறிவுக்கண்கள் திறக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும்பற்றி மிகஉறுக்கமாகவும்,அழகாகவும் பேசினார். பின்னர் இரவு பாடசாலை துவக்கப்பட்டது. முதன் முதலாகப் பத்துமாணவர்கள் பதிவுசெய்யப்பட்டனர். ஆசிரியர் தோழர் எச். எஸ். முனுசாமி அவர்கள் அப்பாடசாலைக்கு ஆசிரியப் பதவி வகிக்க முடிவுசெய்யப்பட்டது.

பின்னர் மேல்நாடு சுற்றுப்பிரயாணம் செய்து வெற்றியுடன் மீண்ட சென்னைமாகாண சுயமரியாதைச்சங்கத்தலைவரும் நமதுசங்க ஆதரிப்பாளரும், தன்மதிப்பியக்கத்தலைசிறந்த தலைவருமான தோழர் ஆர். கே. ஷண்முகம் பி. ஏ., பி. எல். எம். எல். ஏ., அவர்கட்கும், அண்மையில் மேனாட்டினின்று மீண்டும் எம்மிடைப்போதாறும் தன்மதிப்பியக்கத்தந்தையும். தோன்றலுமாகிய பெரியார்கள் ஈ. வி. ராமசாமி, எஸ். ராமனுதன் ஆகியவர்களுக்கும் அவர்களுடைய வருகைக்கப்பால் வரவேற்புஉபசாரமளிக்கவேண்டு மென்றும் தீர்மானம் நிறைவேறியது. பின் கூட்டம் முடிவுபெற்றது.

மதுரை

நாடார் மஹாஜன சங்கம்.

ஆங்கிரச வருஷம் புரட்டாசி மாதம் 26-ந்தேதி1932-ஷு அக்டோபர் மாதம் 11-ந்தேதி செவ்வாய்க்கிழமை இரவு 7.மணிக்கு சஙகக் காரியாலயத்தில் கூடிய கவுன்சில் மீட்டிங்கில் நாடார் மஹாஜன சங்கம் வைஸ் பிரசிடெண்டு விருதுநகர் ராவ்சாஹெப் மு. ச. பெ. செந்திக்குமார் நாடார் அவர்கள் தலைமையின் கீழ் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்

ஈரோடு முனிசிபாலிடி

டவுன் சர்வே படங்களை நாளதுவரை சரிப்படுத்திக் கொண்டு வருவதற்கு கவர்ன்மெண்டு ரூல்களின்படி யோக்யதாம்சம் வாய்ந்த ஒரு டிப்டி சர்வேயர் 6 மாதத்திற்குத் தேவை. கவர்ன்மெண்டு சர்விசில் இருந்தவர்களின் விண்ணப்பத்தை விசேஷமாய்க் கருதப்படும்.

கே. ஏ. ஷேக்தாவுத்,
சேர்மென்.

திருச்செங்கோடு தாலூகா ஆதிதிராவிட மகாநாடு.

7—10—32 மாலை 3-மணிக்கு திருச்செங்கோடு டவுன் போர்டு ஆதிதிராவிட பாடசாலையின் முன்புறமுள்ள மைதானத்தில் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு பல கிராமங்களிலிருந்து சுமார் 500 ஆதிதிராவிடப்பிரதிநிதிகளும், உள்ளூர் கனவான்களுமாக சுமார் 1000 ஜனங்கள் வரை குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது. கூட்டத்திற்கு சேலம் வக்கீல் கனம் கே. வி. சுப்பராவ் பி. ஏ., பி. எல்., அவர்கள் அக்கிராசனம் வகித்தார். அக்கிராசனர் அவர்களுக்கும், மற்றும் சில ஆதிதிராவிடத்தலைவர்களுக்கும் பூமாலை சூட்டப்பட்டு மேளவாத்தியத்துடன் திருச்செங்கோடு டவுன் முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலம் அழைத்துச்செல்லப்பட்ட பிறகு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சபைத்தலைவர் முன்னுரையாக தேசத்தின் போக்கும், தாழ்த்தப்பட்டவர்களின் நன்மைகளும் என்பதுபற்றி நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர். பிறகு ஆதிதிராவிட நண்பர்களான திரு. என். மாரிமுத்து யூனியன் போர்டு மெம்பர், பி. மாரிமுத்து சேலம்ஜில்லா கோவாபரேடிவ் சொசைட்டிகளின் ஹானரரி அசிஸ்டெண்ட் ரிஜிஸ்டர், ஆர். செங்கோடன் சேலம்ஜில்லா எடிகேஷன் கௌன்சில் மெம்பர், எஸ். ஆர். ஸ்ரீரங்கன் திருச்செங்கோடு தாலூகா ஆதிதிராவிட சபை பிரசிடெண்ட், கே. எஸ். கந்தசாமி இச் சபையின் காரியதரிசி, கே. துரைசாமி, எஸ். மாரிமுத்து, ஏ. அருணாசலம், எஸ். முத்துசாமி, கே.மாரி முதலியவர்கள் ஆதிதிராவிடர்களது முன்னேற்ற விஷயமாக பல உபந்நியாசங்கள் நிகழ்த்தினார்கள். 10 வயதுள்ள ஆதிதிராவிடச்சிறுமி சேலம் பாப்பம்மாள் நமது பெண்களின் முன்னேற்றம் என்பதுபற்றி அருமையாகப்பேசமுன்வந்தது சந்தோஷப்படத்தக்கது. உள்ளூர் இந்து நண்பர்களாகிய திரு. சங்கரலிங்கம், சந்திரசேகரன், இவர்கள் இருவரும் ஆதிதிராவிட மக்களுடைய நன்மைகளைக்கெடுக்கும் உயர் ஜாதிக்காரர்களின் போக்கை வெறுத்து பல அரிய விஷயங்கள் பற்றி பேசினார்கள். பின் பல அன்பர்களும் ஆதிதிராவிட முன்னேற்றத்தைப்பற்றி பேசினார்கள். பின் சில தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்.)

கூட்டம்.

22—10—32 சனிக்கிழமை மாலை 5-மணிக்குமேல் மாரிகுப்பம் தென்னிந்திய பௌத்த சங்க சபாமண்டபத்தில் திருவாளர் ஜி. அப்பாதுரையார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் பிரசங்கம் நடைபெறும். அக்கால் திருவாளிகள் திருவாளர்கள் வந்தேகும்படியாய் கோருகிறேன் கௌரவகாரியதரிசி எழுதுகிறார்.

மாளவியா கூற்றுக்கு எதிர்ப்பு

பிரபலஸ்தர்கள் கண்டனம்

லாகூர் ஜட்பட் தோரக் கண்டலம் என்ற ஜாதி ஒழிப்புச் சங்கத் தலைவரான பாய்பரமானந்தர் எம். எல். ஏ. கூறியதாவது;—

தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பிரத்தியேகமான விசேஷ உரிமைகள் அழித்து விட்டு அவர்களை இந்துக்களின் சிநேகிதர்களாக்கி சமூதாயத் தாழ்ச்சியை நீக்காமல் இருந்தால் அவர்கள் மறுபடியும் இந்துமத விரோதிகளிடமே போய்ச்சேர்வார்கள். மாளவியாவும் அவர் சிநேகிதர்களும் தாழ்த்தப்பட்டவரிடையே செய்யும் வருங்கால வேலையைப்பற்றி ஒத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். தங்களின் கோவிலை அவர்களுக்கு உபயோகப்படுத்த விடுவதுமுதல் பழங்காலத்து வழக்கங்களை அடியுடன் ஒழித்துவிட முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் மேலுள்ள சமுதாயக்கட்டுப்பாடுகளை இன்னும் நீடிக்க வைத்திருப்பது அவ்வளவு சரியல்ல.

காந்தியும் தனது கண்களால் நிலைமையைக் கவனிக்க தயாராயில்லாதபோதிலும், இந்து சமுதாயக் கொள்கை உறுதியாகப் பாதுகாக்கப்படவேண்டுமானால் ஜாதி இந்துக்களுக்கும் மற்றவர்களுக்குமிடையேயிருக்கும் அரசியல், மதம், சமூகம் ஆகிய எல்லாவிதமான வித்தியாசங்களையும் கட்டுப்பாடுகளையும் அறவே ஒழிப்பதான ஒரு வழிதானிருக்கிறது

அயோத்தி வைதீக சபைத் தலைவர் திரு. ஜங்பகதூர் சிங் பண்டித மாளவியாவின் மனப்பான்மையை எதிர்த்துக் கூறுவதாவது:—

“பிறப்பின் மூலம் ஜாதி வித்தியாசத்தை நிர்ணயிப்பதற்கும் தீண்டாமை யென்னும் கொடிய வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை. ஆகவே சமபந்தி போஜனத்திற்கும் கலப்பு விவாகத்திற்கும் திட்டங்கள் அமுலிலிருக்கவேண்டும். பிறப்பு மூலம் ஜாதி வித்தியாசம் பாராட்டுவதென்னும் விஷயம் இந்து சமூகத்தை பாழ்படுத்தி இந்நிலைக்குக்கொண்டு வந்துவிட்டது. இந்து சமூகத்தில் சகோதரபான்மையையே அடியோடு ஒழித்து விட்டது. தீண்டப்படாதார்களும் வைதீகர்களாவர். அவர்களுடைய வைதீகம் முட்டாள்தனமானதல்ல. இச்சமூகம் பழைய வழக்கங்களையே பின்பற்றுகின்றது. கெடுதல் விளைவிக்கக் கூடியவைகளை விலக்கி பலத்தைப்பெறக் கூடியவைகளை அனுசரித்து வருகிறது.

புரோகிதமற்ற கிரகப்பிரவேசம்.

முசிரித்தாலூகாவைச் சேர்ந்த தாத்தையங்கார் பேட்டையில் ஜெ

த்துவகுல அன்பர் தேவராஜன் என்பவர் தன் வாழ்க்கைக்காக ஒரு புது வீடு கட்டி இவ் வீடு கிரகப்பிரவேசத்தை சுயமரியாதை முறைப்படி நடத்தினர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருப்பூர் சுயமரியாதை வாலிபர் சங்கம்.

இவ்விடம் “அஞ்சுமனே ஷௌகத்துல் இஸ்லாம்” சங்கத்திறப்பு விழாவின் போது விஜயம் செய்த “தாருல் இஸ்லாம்” ஆசிரியர் சென்னை, தோழர் பா. தாவுத்ஷா பி. ஏ., அவர்கட்கு 10—10—32உ மாலை 7 மணிக்கு ரெயில்வே பிளாட்பாரத்தில் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. மழையின் கொடுமையால் குறிப்பிட்ட இடத்தில் வாசித்தளிக்க வியலாது போயிற்று. வரவேற்புப்பத்திரத்திற்குப் பதிலளிக்கும் போது அவர் “சமூக சீர்திருத்த” விஷயமாக விளக்கமாக சுமார் முக்கால் மணி நேரம் ஒரு அரிய சொற்பொழி வாற்றினர். ஏராளமான கூட்டம் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது. பிறகு வந்தனோபசாரம்கூறக் கூட்டம் கலைந்தது எனப் பொக்கிஷதார் எழுதுகிறார்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

O. S. No. 88 of 1930.
E. P. R. No. 1447 of 1932.

அவனாசியிலிருக்கும் அளகப்ப செட்டியார் பள. வீர. சுப்பிரமணியஞ் செட்டியார்—வாதி

அவனாசி தாலூக்கா பழங்கரை கிராமம் அவனாசி லிங்கம்பாளையத்திலிருக்கும் வாரணாவாசிக்கவுண்டன் மக்கள் முருகனுதகவுண்டன் —3-ம் பிரதிவாதி.

இ 3-ம் பிரதிவாதிக்கு இதனால் தெரிவிக்கப்படுகிறதென்னவென்றால் இவ் வாதி உன் வகையரா பேரில் பெற்றிருக்கும் அடமான டிக்ரிப்படி அடமான சொத்துக்களை ஏலம்போட மனு தாக்கல் செய்து ஏல இஸ்தியாரில் கண்ட இச் சொத்துக்களை நிர்ணயிப்பதற்காக 1932ஆம் அக்டோபர் 19-ந்தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது இத் தேதியில் நீங்கள் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராக வேண்டியது இல்லாதவரை ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்கிற சங்கதியை கண்டிப்பாய் அறியவும்.

M. K. Govindarajulu Chettiar,
Advocate for Decree, Holder.

Tirupur 10-10-32.

டி. எஸ். தேவாஜி அவர்களின் சொற்பொழிவுகள்.

மதுரை ஜில்லா கொட்டாம்பட்டி வடக்குத்தம்பிர்க்காக்கள் பூதகுடி, வேட்டநல்லூர், சடையம்பட்டி, குன்னூரம்பட்டி, சேக்கி ஆலம்பட்டி, பாறை அம்மாபட்டி, ஒடம்பம்பட்டி, மங்கலாம்பட்டி, குட்டஅம்மாபட்டி, மணப்பச்சேரி, வெள்ளாழபட்டி, வெள்ளினிப்பட்டி’ அலங்கம்பட்டி, இவைகளில் திருவாளர்கள் பூதகுடி தெ. பெ. சின்னழகக்கோன், பி. பெரியணக்கோன், முத்துக்கருப்ப பிள்ளை, குன்னூரம்பட்டி வீ. வெள்ளழகனம்பலம், சா. வைத்தியநாதப் பிள்ளை, வீ. பெரியசாமி சேர்வை, கச்சிராயன் கல்லம்பட்டி கே. எஸ். கே. கணபதி முதலிய பெரியாருதவியால் 21—9—32முதல் 10-10-32 வரை திரு. டி. எஸ். தேவஜி அவர்கள் பல அரிய விஷயங்களைப்பற்றி சொற்பொழிவாற்றினர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

பிரசங்கம்.

8—10—32 சனிக்கிழமை மாலை 5-மணிக்குமேல் மாரிகுப்பம் தென்னிந்திய பௌத்த சங்க சபாமண்டபத்தில் திருவாளர் ஜி. அப்பாதுரையார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் இச் சங்க வித்வானும், தமிழ் ஆசிரியரும் திருவாளர் இ. நா. ஐயாக்கண்ணுப்புலவர், எம். இராமசாமியார், ஜி. டி. ராஜன், பி. தனப்பால், திருமதி. கே. சி. எம். ஜெகதாம்பாள் ஆகியவாகள் பேசிய பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்தது.

சூலூர் சுயமரியாதை இளைஞர் சங்கம்.

6—10—32-ந்தேதி வாராந்திரக் கூட்டம் இச்சங்கத்தின் வைஸ்பிரசிடெண்டு தோழர் எஸ். கே. கருப்பணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தீர்மானம்.

இந்த சங்கத்திற்கு முன்னிருந்த பெயரை மாற்றி சுயமரியாதை இளைஞர் சங்கம் என்று பெயர்வைக்க வேண்டுமென்று தீர்மானம் தோழர் கே. கிருஷ்ணன் அவர்களால் கொண்டுவரப்பட்டு தோழர் எஸ். பி. ஆறுமுகம் அவர்களால் ஆமோதித்து சபையோரால்ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டது.

சபைத்தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் சபை கலைந்தது என்று தெரிவித்துக்கொள்கிறேன் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

பார்த்தனர். இவ்வாறு தடை செய்தவர்கள், முன்புறத்தில் காலை 6 மணிக்கே இடத்தைப்பிடித்துக்கொண்டிருந்த ஆந்திரப்பிரதிநிதிகளே யாவார்கள். ஆயினும் திரு. சாமியப்பமுதலியார் தனது பிரசங்கத்தின் சிலபகுதிகளைப்படித்தார். மகாநாட்டுத் தலைவர், திரு. பொப்லி அரசர் அவர்களைத்தலைவர் ஸ்தானத்திற்குப்பிரேரேபிக்கப்பட்டு, ஆமோதிக்கப்பட்டபின் அவர்தமது ஸ்தானத்தில் அமர்ந்து தலைவர்பிரசங்கத்தைப்படித்தார். அப்பொழுதும் கூச்சலும் குழப்பமுமாகவே இருந்தது. இச்சமயத்தில் கீழே இருந்து சத்தம்போட்டுக்கொண்டிருந்தவர்கள், மேடை மேல் ஏறவும், நாற்காலிகளையும், மேஜைகளையும் தள்ளவும் ஆரம்பித்தனர். மண்ணை வாரி மேடைமேல் எறிந்தனர். ஆயினும் தலைவர் பொப்பிலி அரசர் தனது பிரசங்கத்தைப் படித்து முடித்துவிட்டு, மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டதாக அறிவித்தார். பின்னர் தலைவருக்கு மாலையிடப்பெற்றது. பிறகு எல்லாப் பிரதிநிதிகளும், தலைவர்கள் வெளியே வரும்போது, சிலர் அவரைச்சுற்றிக்கொண்டு பலவாறு தெலுங்கில் சத்தம் போட்டுக்கொண்டு வந்தனர். அப்பொழுது திரு. முத்துசாமி வல்லத்தரசு போன்ற சுயமரியாதை வீரர்கள், தலைவரிடம் யாரும் நெருங்காதபடி பார்த்துக்கொண்டு, கையோடு வெளியே அழைத்து வந்தனர். இதனோடு மகாநாடு முடிந்தது.

தமிழ் ஜில்லா பிரதிநிதிகள்.

மத்தியானம் சாப்பாட்டிற்குப் பின் 1 மணிக்கு, மதுரை, ராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர் முதலிய தமிழ் ஜில்லாக்களிலிருந்து வந்திருந்தபிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று திருச்சி திரு. டி. பி.வேதாசலம் பி.ஏ. பி.எல். அவர்கள் தலைமையில் ஆர். சி. ஸ்கூலில் கூடிற்று. சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கூடியிருந்தனர். அக்கூட்டத்தில் மகாநாடு குழப்பமாக முடிவதற்குக் காரணமாயிருந்தவர்கள், திரு. முனுசாமி நாயுடுவும், திரு. குமாரசாமி ரெட்டியாரும் என்று கருதி, அவர்களைக் கண்டித்தும், அவர்களை ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தும், மந்திரி பதவியிலிருந்தும் நீக்கவேண்டும் என்றும் இரு மந்திரிகளின் மேல் கண்டனத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிறகு மாலை 3 மணிக்கு, ராஜா சத்திரம் காம்பவுண்டில், புதுக்கோட்டை, திரு. முத்துசாமி வல்லத்தரசு அவர்களின் தலைமையில் ஒரு சுயமரியாதை மகாநாடு நடைபெற்றது. அதற்கு சுமார் இரண்டாயிரம் 2000 பிரதிநிதிகளுக்கு மேல் வந்திருந்தனர். கூட்டத்திற்கு புதுக்கோட்டை, திரு. முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் தலைமை வகித்தார்கள். சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப்பற்றி, திரு. பண்டிட் திருஞானசம்பந்தர், எஸ். வி. லிங்கம், எஸ். குருசாமி முதலானவர்கள் மிகவும் ஊக்கத்தோடும், உணர்ச்சியோடும் பேசினார்கள். பிறகு, கூட்டத்தினர் அனைவரும், ஊர்வலமாக, "பி. டி. ராஜனுக்குஜே, பொப்பிலி ராஜாவுக்கு ஜே, ஈ. வெ. ராமசாமிக்கு ஜே, சர். நியாகராயருக்கு ஜே, டாக்டர் நாயருக்கு ஜே, பனகால் ராஜாவுக்கு ஜே, சௌந்திரபாண்டியனுக்கு ஜே, ஆர். கே. சண்முகத்திற்கு ஜே" என்று ஆரவாரஞ் செய்துகொண்டு, திருவாளர் ராஜன் அவர்களையும், பொப்பிலி அரசரையும், வெங்கட்டகிரி குமாரராஜாவையும் சந்தித்து மாலையிட்டனர். அவர்கள் அன்று மகாநாட்டைச் சமாதானத்துடன் நடத்தப்பாடுபட்டதைப் பாராட்டியும் இரண்டு அரசர்களும், சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்தும், அதில் தங்களுக்குள்ள பற்றை விளக்கியும், அவ்வியக்கம் இந்தியா முழுதும் பரவவேண்டிய அவசியத்தைப் பற்றியும் கூறி, தங்களைத் தமிழ் மக்கள் கௌரவித்ததற்காக நன்றியும் தெரிவித்துக்கொண்டனர். இதுபோலவே திரு. பி. டி. ராஜன் அவர்களும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப்பாராட்டியும், அக்கொள்கையின் அவசியத்தைப்பற்றியும், அவ்வியக்கத்தில் தான் வைத்திருக்கும் அன்பையும் தெரிவித்து, தன்னை கௌரவித்ததற்கு நன்றியும் பாராட்டினார்.

பிறகு அன்று இரவே அனேகமாக எல்லாப்பிரதிநிதிகளும் ஊருக்குப் புறப்பட்டனர்.

மகாநாட்டின் ஏற்பாடுகள்.

மகாநாட்டிற்கு ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தாலும், சாப்பாட்டு விஷயத்திலோ, ஜாகை விஷயத்திலோ எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரதிநிதிகளாக இல்லாமல் சும்மா வந்திருந்தவர்கள்கூட, மகாநாட்டு ஜாகைகளில் தங்கியிருக்கவும், சாப்பிடவும் அனுமதிக்கப்பட்டனர். ரயில்வே ஸ்டேஷன் முதல் மகாநாட்டு ஹால் வரையிலும் வழியில் பல விடங்களில் வரவேற்புத்தட்டிகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. தலைவர்கள் தங்கியிருந்த ஜாகைகளிலும் இவ்வாறே அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆனால் மகாநாட்டுக்காகக் குறிப்பிட்டிருந்த ஹால் மாத்திரம் சிறியதாகப் போய்விட்டது. ஹால் தாராளமாக இருந்திருக்குமானால் மேலே நடந்த குழப்பங்கள்கூட நடந்திருக்க அவ்வளவு வசதியிருந்திராது, என்று கூறலாம். இவ்வளவு தூரம் மகாநாட்டு நிர்வாகங்கள் யாதொரு குறைவுமின்றி நடைபெறக் காரணமாயிருந்தவர்களில் முதன்மையானவர்கள், திரு. என். ஆர். சாமியப்பா, டாக்டர், தாஜுடீன் முதலானவர்களாவார்கள்.

[-8ம் பக்கத்தொடர்ச்சி]

தில் தான் நமது வருங்கால முன்னேற்றம் தீர்மானிக்கப்படும். பொதுச் செலவில் கல்வி அபிவிருத்தியே முக்கியமானதென்று நாம் கட்டாயப்படுத்த வேண்டும். சட்டசபைகளில் ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பது போன்ற பிரத்தியேக உரிமைகளைக் கோராமல் வயதானவர்களின் ஓட்டுரிமையையும், சம அந்தஸ்தையும் பெற்று அதன்மூலம் தங்கள் உரிமைகளை அனுபவிக்கத் தயாராக ஸ்திரீகள் இருப்பதால் அவர்கள் கல்விப் பயிற்சி பெற்றால் எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க விசேஷ நற்பயன் படுமென்று நான் எண்ணுகிறேன். ஆகையால் கல்வி விஷயத்தில் ஆண்களுடன் நாம் சமத்துவம் பெறும்வரை வாளாவிருக்கக் கூடாது.

சமஷ்டி அரசியலும், ஒற்றுமையும்.

சமஷ்டி அரசியல் முறையில் பொதுவாக எல்லாவற்றிற்கும் நாம் முழுமையான சுயராஜ்யம் பெறுவோம் என்பதை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். சமஷ்டி அரசியல் ஏற்பட்டபின் உண்டாகும் தேசப்பிரச்சினைகளை எல்லா வகுப்பினரும் ஒத்துழைத்தாலன்றி தீர்க்கமுடியாது. அப்படியில்லாவிடில் தேசத்திற்கு அந்த மாறுதலானது நலத்தை விடத் துன்பத்தையே கொடுக்கும். இதுவரை ராஜீய விஷயங்களின் மாறுபட்ட அபிப்பிராயங்களில் நாம் கலந்துகொள்ளவில்லையாயினும் இனிமேல் எதிரிடையான அபிப்பிராயங்களை அடக்கி வைப்பதில் வெற்றி பெறவேண்டும். ஆகையால் ராஜீய விஷயங்களிலும் நாம் ஒரு முக்யமான பாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய சமூக சச்சரவுகளை ஒழிக்கும் வரை நம் தேசம் உதவியின்றியிருக்கும். வெறும் தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றுவதில் பிரயோஜனமில்லை. அவைகளைக்கிரியாம்சையில் கொண்டு வரும்வரை நாம் வாளாவிருக்கக் கூடாது. பணத்தினால் ஏற்படக்கூடிய வித்தியாசங்களைத் தடுக்க நம்முடைய பொருளாதார, சமூக ராஜீய விஷயங்களை நம்முடைய ஒற்றுமையினால் தகுந்தபடி முடித்துக் கொண்டு எல்லாருக்கும் சுகமளித்து உலகத்திற்கே ஒரு உதாரணத்தைக் காட்டுவோமாக!

ANANGARANGABATIKA.

(Enjoyment Pill)

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY

and IMPOTENCY–Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of tailure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

"SAILASRAM" (K)
Chandanpur,
(Khulna) E. B. R.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

"சிருஷ்டி கர்த்தா"வுடன் யுத்தம்.

விதியும், வினையும் ஓடி ஒளிகின்றன.

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

கடவுள், சிருஷ்டி கர்த்தா' அல்லது பிரம்மா உலகத்திலுள்ள உயிர்களைப்படைக்கிறார்: எல்லா ஜீவன்களுக்கும் அது அது செய்த கர்மத்துக்குத்தக்கபடி விதிகளை உண்டாக்குகிறார்; எல்லாம் பிரம்மா எழுதிய தலையெழுத்தின் பிரகாரம் நடக்கிறது என்று மூடஜனங்கள் முட்டாள்தனமாக நம்பிவருகிறார்கள், ஒருவன் குருடனாய்ப்பிறப்பதும், இன்னொருவன் ஊமையாய்ப் பிறப்பதும், ஒருவன் குள்ளமாயிருப்பதும் இன்னொருவன் உயரமாய் வளர்வதும், பெண்ணாகப் பிறப்பதும் ஆணாகப்பிறப்பதும், ஒருவன் மூடனாய் இருப்பதும் இன்னொருவன் புத்திசாலியாய் இருப்பதும், இன்னும் இவைபோன்ற விஷயங்களெல்லாம் அவர் அவர்களின் கர்மத்தின்படி, தலைவிதிப்பிரகாரம் நடக்கிறது என்று சாதாரணமாகப் பண்டிதர் முதல் பாமரர்வரையில் எல்லாஜனங்களும் நம்பிவருகிறார்கள். ஆனால், பகுத்தறிவுகொண்டு ஆராய்ந்துபார்த்தால் விதிஎன்பதும் வினைஎன்பதும், கர்மம் என்பதும் எல்லாம் புரட்டுப்பேச்சு, முட்டாள்தனம், மூடநம்பிக்கைஎன்பது நன்குவிளங்கும்.

எப்படி என்றால், "சிருஷ்டி கர்த்தா" ஏற்படுத்திய தலைவிதியை மனிதன் தன்பகுத்தறிவைக்கொண்டு விலக்கிவிடுகிறான். அதாவது கடவுள் விதித்த விதியை மனிதன் மாற்றிவிடுகிறான். கடவுள் தோற்றுப்போய் அவமானம் அடைகிறார். இதற்குக்கீழ் கண்ட உதாரணங்களே போதுமானவை.

"கடவுள்," சிலரை ஊமையாகப் பிறக்க வேண்டும்என்று விதிக்கிறார். அந்தவிதியின் பிரகாரமே, சிலஜனங்கள ஊமையாகப்பிறந்து பேசமுடியாமல் தவிக்கிறார்கள், ஆனால், மனிதன் தன்பகுத்தறிவைக் கொண்டு ஊமைகளைப்பேசும்படிச்செய்து விடுகிறான். ஊமைகளின் தொண்டையில் சில ஆப்பரேஷன்களைச்செய்து ஊமைகளைப்பேச வைத்திருக்கிறார்கள். சென்னை மயிலாப்பூரில் உள்ள செவிடர் ஊமைகளின் பாடசாலையில் (Deaf and Dumb School) சுமார் பத்துவயதுள்ள ஒரு ஊமைப் பெண்ணுக்கு, சென்னை ஜனரல் ஆஸ்பத்திரியில் தொண்டையில் ஆப்பரேஷன் செய்தார்கள். ஆப்பரேஷன் வெற்றிகரமாய் முடிந்து, இப்போது அப்பெண் நன்றாய்பேசுகிறது.

அப்பெண்ணின் தலைவிதி அவளை ஊமையாய் பிறக்கச்செய்தது. மனிதனின் பகுத்தறிவு அவளைப்பேசும்படிச்செய்து விட்டது. இது சிருஷ்டி கர்த்தாவுக்குத் தோல்வியும் அவமானமும் தானே?

இன்னொரு விஷயம்பாருங்கள். மனிதர்களிலும் மிருகங்களிலும் சிலர் சாதாரண உயரத்தைவிட குள்ளமாகவும் சிலர் அதிக உயரமாகவும் வளர்கிறார்கள். இது என்னென்றுகேட்டால், அவரவர்களின் தலைவிதி என்றுசொல்லிவிடுகிறார்கள். இந்த விஷயத்திலும் கடவுள் ஏற்படுத்திய தலைவிதியை மனிதன் தன்பகுத்தறிவினால் வென்றுவிடுகிறான். எப்படி என்றால் அமெரிக்கா தேசத்தில் (SutherlandSimpson) என்று ஒரு ஆராய்ச்சிக்காரர் இருக்கிறார். அவர் தமது ஆராய்ச்சியைக் கொண்டு பிராணிகள் சாதாரணமாக வளர்கிற உயரத்தைக்குறைத்து விடுகிறார். அதாவது சில ஆட்டுக்குட்டிகளைக்கொண்டுவந்து அவற்றில் சில ஆட்டுக்குட்டிகளின் தொண்டையில் ஆப்பரேஷன் செய்தார். என்ன ஆப்பரேஷன் என்றால், தொண்டையில் உள்ள தைராய்ட் கிளேண்ட் (Thyroid gland) என்னும் உறுப்பை எடுத்து விட்டார். அதன் பிறகு சிலவருஷங்கள் சென்றன. ஆப்பரேஷன்செய்யப்பட்ட ஆட்டுக்குட்டிகள் வளராமலே குள்ளமாக இருந்து விட்டன. ஆப்பரேஷன் செய்யும்போது அந்தக்குட்டிகள் எவ்வளவு உயரம் இருந்தனவோ அவ்வளவு உயரமாகவே வளராமல் இருந்துவிட்டன. ஆப்பரேஷன் செய்யப்படாத ஆட்டுக்குட்டிகள் சாதாரணமாக வளர்ந்து விட்டன. இவ்விதமாகவே, நாய்க்குட்டிகளையும் ஆப்பரேஷன் செய்து சோதித்துப்பார்த்து விட்டார்கள். இன்றும், மனிதனையும் சோதனைசெய்தாகிவிட்டது. பத்தரை வயதுள்ள ஒருபையன். அந்தப்பையன் வயதுக்குத்தகுந்த உயரமில்லாமல், நறுக்கைப்பிடித்து மிகவும் குள்ளமாக இருந்தான் "தலைவிதி" அவனைக்குள்ளமாகப் பிறக்கச்செய்து விட்டது. ஆனால், பகுத்தறிவுள்ள டாக்டர்கள் அவனைஉயரமாகவளரச் செய்து விட்டார்கள். எப்படி என்றால், அப்பையனைக்கொண்டுவந்து கழுத்தில் தைராய்ட் (Thyroid) ஆப்பரேஷன் செய்தார்கள், அதன் பிறகு, அப்பையன் அவன்வயதுக்குத் தகுந்த அளவு உயரமாக வளர்ந்து விட்டான். அம்மட்டோடுநிற்கவில்லை அவனுக்குவயது ஆக ஆக பெரியவனாக (உயரமாக) வளர்ந்து விட்டான்!

அவனைக்கடவுள் குள்ளமாக இருக்கவேண்டுமென்று விதித்த விதியை மனிதன் தனது பகுத்தறிவையும் ஆராய்ச்சியையும் கொண்டு உயரமாக வளரச்செய்துவிட்டான். இது. விதியை விதித்த கடவுளுக்குத்தோல்வியும் அவமானமும் அல்லவா என்று கேட்கிறேன்.

இன்னும் ஒரு உதாரணம் வேண்மா? சிலஜனங்கள்மிகவும் மட்டிகளாக, அதாவது நிர்மூடகளாக (Idiot) இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கொஞ்சங்கூட புத்திகிடையாது. எதைச் சொன்னாலும் அவர்களுக்கு விளங்குவதில்லை. இப்படிப்பட்டவர்களைப் பாமர ஜனங்கள் பார்த்து "இது இவர்கள் தலையெழுத்து, முன் பிறப்பில் செய்த வினை" என்று சொல்லுகிறார்கள். நிர்மூடர்களாகப் பிறக்கவேண்டும் என்று கடவுள் விதித்த விதியை மனிதன், தன் பகுத்தறிவைக் கொண்டு இப்போது தடுத்துவிடுகிறான். எப்படி என்றால் கூறுவோம்.

ஜூலியன் ஹக்ஸ்லி [Julian Huxley] என்பவர் நிர்மூடனாக (Idiot) இருந்த ஒரு சிறுவனை கிளேண்ட் (Gland) ஆப்பரேஷன் செய்தார். அந்த ஆப்பரேஷனுக்குப் பிறகு அச்சிறுவன் புத்திசாலியாய்விட்டான். அவன் முகத்தில் புத்திசாலித்தனத்தை விளக்கும் தேஜசும் காணப்பட்டது. நிர்மூடனாயிருந்த அச்சிறுவன், ஆப்பரேஷனுக்குப்பிறகு, மற்றச்சிறுவர்களைப்போலவே புத்திசாலியாகிவிட்டான். இதுவும் சிருஷ்டிகர்த்தாவுக்குத் தோல்வியும் அவமானமும் அல்லவா என்று கேட்கிறேன்.

தலைவிதி என்பதும், கடவுள் அமைப்பு என்பதும், முன் பிறப்பில் செய்த வினை என்பதும் இவை எல்லாம் முட்டாள்தனம் என்பது இதனால் விளங்கவில்லையா? இன்னும்சில உதாரணங்களைக் கூறுகிறேன் கேளுங்கள்.

சில பிராணிகள் காய்கனிகளை மாத்திரம் தின்று ஜீவிக்கின்றன. சில பிராணிகள் மாமிச உணவையே தின்று ஜீவிக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்று கேட்டால், "கடவுள் அவ்வாறு விதித்தார்." என்று சொல்லுகிறார்கள். ஆனால், மனிதன் தன் பகுத்தறிவைக் கொண்டு தாவர உணவை உண்ணும் பிராணிகளை மாமிச உணவு உண்ணும்படியாகவும், மாமிச உணவு உண்ணும் பிராணிகளைத்தாவர உணவு உண்ணும்டியாகவும் செய்துவிடுகிறான். வியன்னா (Vienna) நகரத்தில் இவ்விதம் செய்திருக்கிறார்கள். எப்படியென்றால், புழு பூச்சிகளைக்கொன்று தின்று ஜீவிக்கிற ஒருவகை வண்டையும், தாவர உணவையே தின்று ஜீவிக்கிற இன்னொருவகை வண்டையும் கொண்டு வந்து அவற்றின் தலையை அறுத்து மாற்றி வைத்துவிட்டார்கள். அதாவது மாமிசம் உண்ணும் வண்டின் தலையைத் தாவரம் உண்ணும் வண்டின் உடம்பிலும், தாவரத்தை உண்ணும் வண்டின் தலையை மாமிசம் உண்ணும் வண்டின் உடம்பிலும் பொருத்தி வைத்துவிட்டார்கள். சில நாள்கள் ஆனதும் மாற்றிவைக்கப்பட்ட தலைகள் அந்தந்த உடம்புகளில் ஒட்டிக் கொண்டன. அதன்பிறகு அந்த வண்டுகளின் சுபாவமும் மாறிவிட்டது. எப்படி என்றால் சாகபக்ஷணியாயிருந்த வண்டு மாமிசபக்ஷணியாக மாறி புழு பூச்சிகளைக் கொன்று தின்ன ஆரம்பித்து விட்டது. மாமிசபக்ஷணியாயிருந்த வண்டு சாகபக்ஷணியாக மாறி இலை தழைகளைதின்ன ஆரம்பித்து விட்டது. பகுத்தறிவின் அற்புத சக்தியாலன்றோ இவ்விதம் செய்யப்பட்டது? இந்த விஷயத்திலும் கடவுள் விதித் விதியை மனிதன் மாற்றிவிட்டானன்றோ?

இன்னும் உலகத்திலுள்ள பிராணிகளில் சில ஆணாகவும் சிலபெணணாகவும் பிறக்கின்றன. ஆண்களின் சுபாவம் வேறாகவும் பெண்களின் சுபாவம் வேறாகவும் இருக்கின்றன. காரணம் கேட்டால் அது கடவுள் விதித்த விதி என்கிறார்கள். இந்த விதியையும்கூட மனிதன் மாற்றிவிடுகிறான். இதுவும் வியன்னா நகரத்திலேயே செய்யப்பட்டது. ஒரே இனத்தைச்சேர்ந்த ஆண் வண்டையும் பெண்வண்டையும் கொண்டு வந்து அவற்றின் தலைகளை அறுத்து மாற்றி வைத்துவிட்டார்கள். அதாவது ஆண் வண்டின் உடலிலும், பெண் வண்டின் தலையை ஆண்வண்டின் உடலிலும் பொருத்திவிட்டார்கள். சில நாளுக்குள் அத்தலைகள் அவ்வவ் உடல்களில் நன்றாய் ஒட்டிக்கொண்டன. அதன் பிறகு அவ்வண்டுகளில் காணப்பட்ட ஆச்சரியம் என்னவென்றால், பெண்வண்டாக இருந்தது ஆண் வண்டின் சுபாவத்தையடைந்து விட்டது. ஆண்மையோடு விளங்கிய வண்டு பெண் வண்டின் சுபாவத்தை யடைந்து விட்டது.

இவ்விஷயத்திலும் சிருஷ்டிகர்த்தா தோல்வி யடைந்து விட்டானன்றோ? இதனால், விதிஎன்பதும் வினை என்பதும் மூடநம்பிக்கை என்று விளங்கவில்லையா?

பகுத்தறிவைக்கொண்டு செய்யும் ஆராய்ச்சியின் பயனாக, எத்தனையோ ஆச்சரியகரமான விஷயங்களையெல்லாம் மனிதன் செய்து முடிக்கிறான். சில ஜனங்கள் சோம்பேறிகளாகவும் சிலர் சுறுசுறுப்புள்ளவர்களாகவும், சிலர் மிக்க தைரியசாலிகளாகவும், சிலர் பேடிகளாகவும் இருக்கிறார்கள். கோழைகளைத் தைரியசாலிகளாகவும், சோம்பேரிகளைச் சுறு சுறுப்பாளர்களாகவும் செய்க் முடியும் என்று இப்போது ஆராய்ச்சியின் மூலமாகக் கண்டறிந்திருகி

கிறார்கள். இன்னும் எத்தனையோ உதாரணங்களை எழுதலாம். இடம் விரியும் என்றஞ்சி விடுகிறோம்.

ஆகவே, வேதம் புராணம், கடவுத கோயில், விதி, வினை என்று சொலு விதகொண்டு நாளுக்கு நாள் முட்டாள்களாப்போகிற வழக்கத்தை விட்டு, எந்த விஷயத்தையும் பகுத்தறிவு கொண்டு ஆராயும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

வாழ்வில் எல்லா வகைகளிலும் பெண்டிர் ஆடவரைப்போன்றே பாவிக்கப்படுவர். ஓர் தாய்தந்தைக்கு ஓர் குழந்தை பிறந்ததும் அக்குழந்தை ஆணாயினும் பெண்ணாயினும் அது "சிசு பாதுகாப்புச்சாலை"யில் சேர்க்கப்படும். அங்கு பல பெண் குழந்தைகளும் ஆண்குழந்தைகளும் அவ்வவற்றிற்குத் தக்கபயிற்சிகளுடனும் பாதுகாப்புகளுடனும் கவனிக்கப்படுமாதலின், அங்குள்ள பெண்குழந்தைகள் பலமுள்ளவைகளாகவே இருக்கும். முறையான தேகப்பயிற்சியுடனும், போஷிப்பிற்கான உணவுடனும் வளர்க்கப்படும் அச்சிறுமிகள்! பின்னர் பெரியவராகித்தாய்மாராகின்ற காலத்தில் அவர்களின் வயிற்றில் ஜனிக்கும் குழந்தையும் திடகாத்திரமுடைய தேகத்துடனேயே இருக்கும்.

கல்வி,

விஷயத்தில் ஆடவரைப்போலவே பெண்களுக்கும் கட்டாயக்கல்வி கற்பிக்கப்படவேண்டும். பொதுக் கல்வியுடன், கைத்தொழிற்கல்வியும் கற்பிக்கப்படும். உணவு விஷயத்தில் மற்றவர்களிலிருந்து பேதமின்றி உணவளிக்கப்படும். அவர்களது உத்தியோக விஷயங்களும் இதற்கு முந்திய கட்டுறைகளில் நாம் விவரித்துள்ளவற்றைப்போன்று தங்கள் தங்களது அறிவிற்கியன்ற எல்லாத்தொழில் முறைகளிலும் அமருவார்,

விவாக விஷயத்தில் 21-வயதுக்குட்பட்ட பெண்கள் இல்வாழ்க்கையிலிறங்கலாகா தெனத்தடுக்கப்படுவார்கள். ஏனெனில் பெண்கள் தம் இளம் பிராயத்திலேயே இல்வாழ்க்கையிலீடுபட்டு குழந்தைகளைப் பெறுவார்களாயின் அசுகுழந்தைகள் பலமற்றவையாயிருப்பதுடன் தாய்மாரும் பலங்குன்றிவிடுகிறார்கள். எனவே இது சட்டமூலந்தடுக்கப்படல்வேண்டும். ஓர் தேசத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் அத்தேசத்தைத்தாங்க வேண்டியதாக விருத்தலின் அவ்வொவ்வொரு குழந்தையும் திடகாத்திர தேகமுடைய தாயிருககும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது ஓர் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

பிரசவம்.

பொதுவுடைமை வாழ்வில் பெண்டிரும் ஏதேனுமொரு தொழிலில் ஈடுபட்டிருப்பராதலின் அவர்களது கர்ப்ப காலத்தில் ஓய்வுடன் பிரசவச் சாலைகளில் சேர்க்கப்படுவார்கள். அங்கு தேர்ந்த மருத்துவர்களால் சுகாதார முறைப்படி பிரசவம் நடைபெறும்.

எந்த ஒரு நாட்டு அரசாங்கம் பிரசவகாலத்தில் பெண்களுக்கு விசேஷ உதவியளித்து ஓய்வும் தரமறுக்கிறதோ அந்த அரசாங்கத்தில் பெண்கள் குழந்தைகளே பெறமாட்டோமென மறுத்துவிடவேண்டும்.

விவாக விஷயத்தில் தத்தமக்குரிய பெண், ஆண் துணைகளைத் தேடிக்கொள்ளும் உரிமை மணம் செய்து கொள்ளும் யுவர்களுக்கும் யுவதிகளுக்குமே இருக்தும். அவர்களது உரிமையில் யாரும் தலையிடமாட்டார்கள். விவாகம் செய்து கொள்ள யோக்கியதையற்று நோயுடையோராயும் அந்நோயுடையவர்கள் கூடிப்பெரும் குழர்தைகளும் நோயுள்ளவையாயும் பலவீனமானவையாயுமிருக்குமாதலாலும், அத்தகைய சந்ததிகளால் நாட்டிற்கு எந்தகைய நன்மையும் உண்டாக்காமல் போவதோடு, அக்குழந்தைகளின் நோய் முதலியன மற்றவர்களுக்கும் பரவக்கூடுமாதலின் அத்தகைய நோயுடைய ஆடவரும் பெண்டிரும் சேர்க்கை வைத்துக்கொள்வதினின்றும் கண்டிப்பாகத்தடுக்கப்படுவார்கள். அதாவது அத்தகையோர் அந்நோய் தீரும்வரையில் வைத்திய சாலைகளிலேயே தங்கியிருக்குமாறு செய்யப்படுவர்.

மற்றப்படி ஆரோக்கியமான தேகத்தையுடைய ஆடவரும் பெண்டிரும் தத்தமக்குப் பிரியமான துணையைத்தேடியடைவார்கள். அவ்வாறு ஒன்று சேர்ந்த தம்பதிகளுக்குள் ஏதேனும் காரணத்தால் அவர்கள் பிரிந்துவிட ஏற்பட்டால் அவர்கள் தாராளமாகப்பிரித்துவிடலாம். அதற்கு எவ்வித நிபந்தனையுமிராது. ஒரு ஸ்திரீயும் புருஷனும் தாங்கள் சதிபதியாக ஆவதாக ஓர் அறிக்கையில் கையெழுத்திட்டு அரசாங்கத்துக்கு அனுப்பிவிடல் ஒன்றே, அவர்களைச்சதிபதிகளாக்கிவிடும். பிரியும்பொழுதும் அவ்வாறே தாங்கள் பிரிந்துவிட்டதாக அறிவித்துவிட்டால் போதுமானது.

பொதுவுடைமை வாழ்வில் ஓர் ஸ்திரீயோ, புருஷனோ தான்தான் விரும்பும் துணையையடைவதில் எந்தவிதமான தடையும் இராதென்பது கவனிக்கத்தக்கதாம். பணம் படைத்த ஒருவன் தன் பணத்திமிரால் விருப்பமற்ற மங்கையை பலாத்காரமணம் புரிவதும், பெண்ணின் பெற்றோர் பணத்திற்குத்தன்பெண்ணை விற்பதுமான கொடுமைகள் யாவும்மாண்டு மடிந்துவிடும். அந்தக்காலத்தில்தான் உண்மைக்காதல் ஒளி நாட்டில் பிரகாசிக்கும்! மண்ணில் பிறந்த மக்களனைவரும் காதல் வாழ்வைப்பெற்று மகிழ்வர்.

விருப்பமற்றபோது ஆணும் பெண்ணும் பிரிந்து விடுவதற்கு வசதியிருக்கையில், தன் துணைவியை இழந்த ஆடவன் மீண்டும் ஓர் துணைவியைத் தேடிக்கொள்வதற்கும், அல்லது தனது துணைவனை இழந்த ஓர் பெண் வேறு தனக்குகந்த ஓர் துணைவனைத் தேடிக்கொள்வதற்கும் வசதிகளிருக்குமென்பது பற்றி விவரிக்க வேண்டியதின்றும்.

ஆடவருக்குப் போதிய உடைகள் எவ்வித அந்தஸ்து பேதமுமின்றி அளிக்கப்படுவது போலவே, பெண்களுக்கும் எவ்வகைப் பேதமுமின்றி அவர்களுக்கான உடைகள் அரசாங்கத்தாலேயே கிடைக்கும்.

ஆடவரைப் போன்றே பெண்டிரும் எல்லாவிதமான தொழில்களிலும் ஈடுபட்டிருப்பர். ஒருவர் மலத்தை ஒருவர் வாறுதல், அதாவது கக்கூஸ்களைச் சுத்தஞ் செய்தல் என்ற வேலை, எந்த மனிதனுக்கும் அல்லது எந்த ஸ்திரீக்கும் இராது. அவையெல்லாம் இயந்திர உதவியால் சுத்தம் செய்யப்படும். ஆனால் அந்த இயந்திரங்களை இயக்கும் வேலையில் ஆணும் பெண்ணும் ஈடுபடுவதைப் பற்றி எந்த விதத்தகராறும் இருக்காது.

பஞ்சமா பாதகங்கள்.

நாம் இதுவரை விவரித்துள்ள பொதுவுடமை வாழ்வில், கொலை, களவு, பொய், விபசாரம், கட்குடி, ஆகிய இவையெல்லாம் காணப்படமாட்டாது. ஏனெனில், இன்று ஒருவன் பொய் பேசுவதும், களவு செய்வதும், கொள்ளையிடுவதும் என்? வயிற்றுக்கில்லாத குறையும், பெரிய பணக்காரனாகிச் சுகபோகங்களை அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணமுமே இவற்றிற்குக் காரணமாகும். ஆனால் பொதுவுடைமை வாழ்வில் எந்தத்தனிமனிதனுக்கும், பிரத்தியோகமான ஆஸ்தியென்று ஒரு தம்படியும் இராதாதலின், ஒருவன் அடுத்தவனைப் பார்த்துப் பொறாமைப்படவும், களவு செய்யவும், இடம் எவ்வாறிருக்க முடியும்?

இஷ்டப்பட்ட புருஷனையும், இஷ்டப்பட்ட பெண்ணையும் தாராளமாக அடைய இடமிருக்கையில் விபசாரம் என்பது நடைபெற என்ன காரணம் இருக்கமுடியும்?

மதுவருந்துதல் தீதெனவும், சுகாதாரத்திற்குத் தீங்கான தெனவும் பொதுமக்கள் தெளளத் தெளிய உணருவதுடன், மதுஉற்பத்தியே இருக்காததலின், மதுவருந்துதல் என்பது, அதனால் மதிமயங்கி வீதியில் புறண்டு வீண் சண்டை வளர்ப்பதென்பதும் இல்லாது போகுமல்லவா?

எனவே பொதுவுடைமை வாழ்வில் பிறர் பொருளை அபகரித்தல் (பிறனுக்குப் பொருளிருந்தாலன்றோ அபகரிப்பான்!) பொய் சொல்லல், விபசாரம் செய்தல், மதுபானம் அருந்தல், முதலிய இவையெல்லாம் தானாகவே ஒழிந்து போன ஓர் நாட்டில், எவ்விதமான சச்சரவுகளும் சண்டைகளும் எவ்வாறு இருக்கமுடியும்? முடியாதாதலின், சண்டை சச்சரவுகளையும், சொத்து வியாஜ்ஜியங்களையும், விபசார வழக்குகளையும் மோசச்செயல்களையும விசாரித்து முடிவு செய்வதற்கான நியாயஸ்தலங்களுக்குப் பொதுவுடைமை நாட்டில் என்ன வேலை? என்ன அவசியம்? ஒன்றுமில்லை.

நாட்டுமக்களில் ஒருவனுக்கும் ஒருவளுக்கும் எந்தவிதப் பேதமும் பொருளாதாரத்திலும் சுகவாழ்விலும் இருக்கமுடியாது. அப்படியாகும் போது, பொறாமை சுயநலம் முதலிய துர்க்குணங்களும் இருக்க இடமில்லாது போகின்றது. இவையில்லாதவிடத்தில் கொலை, களவு, பொய், விபசாரம், கட்குடி முதலியவும் அற்றுப்போகின்றன. அப்பொழுது வக்கீல்களுக்கும் நியாஸ்தலங்களுக்கும் பொதுவுடைமை வாழ்வில் வேலையே இல்லை—ஆ! என்ன இன்பகரமான வாழ்வு!

அரசனும், ஆண்டியும்

பிறவியிலொன்றே.

மாதர்களுக்கு

இது தான்வேண்டியது.

கெர்ப்ப எண்ணெய்



மாதாந்தா காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம்உண்டாகும் மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அன்னிய நாட்டார் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி S.I.

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

தான் பொது ஜனப்பிரதிநிதி என்னும் பெயருக்குரியவர்களாவோம். நாம் சட்டசபையில் ஆதிக்கம் பெற்றது மட்டுமன்றி, இந்தியா முழுதிலும், அமைப்புள்ள ஜன நாயக தத்துவ அரசியல் கட்சியினராகிய நாம், நம் மாகாணத்திற்குப் பெருங்கடமையாற்ற வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

அ. இ. பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ்.

இதற்கு நாம் மாகாண அரசியல் கட்சியாராக மட்டும் நம்மைக் கருதக்கூடாது. நமக்குள்ள அகில இந்திய அமைப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆகவே நாம் மேலும் முன்னேறிச் செல்லவேண்டியது இந்தியாவின் நலனைக் கருதியேயாகும். இந்த அமைப்பிற்கான ஆரம்பவேலைகள் நடைபெற்று விட்டன. அகில இந்திய பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் ஏற்பட்டுவிட்டது. அதன் இரண்டாவது மகாநாட்டிற்குக் காலஞ்சென்ற பனகால் அரசர் தலைமை வகித்தார். மகாநாடு வெற்றியுடன் இனிது முடிந்தது. அகில இந்திய பார்ப்பனரல்லாதார் காங்கிரசைத்தோற்றுவிக்க அரிய முயற்சிகள் செய்த நம் கட்சித்தலைவர்களுக்கும் பம்பாய் மாகாணத்திலுள்ள தலைவர்களுக்கும் மத்திய மாகாணத் தலைவர்களுக்கும் நாம் நன்றி செலுத்துகின்றோம். இந்த காங்கிரசைத் தோற்றுவித்த பிறகு அதைத்தக்கபடி அமைத்து முடிககவேண்டியது நமது கடமையாகும். சீக்கிரத்தில் நன்கு அமைக்கப்பட்ட கட்சியாக அதுமாறும்போது ஜனங்களின் நலன்களைக்காப்பாற்றுவதே நோக்கமாகும். எல்லா வகுப்பாருக்கும் நீதி வழங்குவதே கருத்தாகவும், சர்வதேச சங்கத்தில் இந்தியாவும் அதற்குரிய நிலையை யெய்தும்படிச் செய்யவும் இது பாடுபடும். நம்முன்னுள்ள வேலையை நாம் செய்துமுடிக்க வேண்டுமானால் மேற்கூறிய சர்க்கார் உத்திரவு கைநழுவ விடப்படாது நேர்மையான நெறியில் அமுல் நடத்தப்படவேண்டும். இந்த உத்தரவை மாற்ற முயற்சிக்கின்றவர்களுக்கு நான் எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன்.

கிராமத்திட்டம்.

இனி, பொது ஜனங்களுக்கே அரசியல் ஆக்கம் அளிக்கப்படப் போகின்றது. அந்த ஆக்கத்தைச் சீரியமுறையில் நடத்தவேண்டுமானால் ஆரம்பக்கட்டாயக்கல்வித்திட்டத்தையும், கிராமப் புனருத்தாரணத் திட்டத்தையும், உடனே நாம் அமுலுக்குக்கொண்டுவரவேண்டும். குடியானவர்கள் தம் தானியங்களை விற்பதற்குப் போதிய வசதிகள் ஏற்படுத்தவேண்டும். பாஞ்சால நிலத்தடைச்சட்டத்தையோட்டி, நம் மாகாணத்திலும் ஒரு சட்டத்தைகொண்டுவர வேண்டிய அவசியத்தைக்குறித்து ஆலோசிக்க வேண்டும். இச்சட்டப்படி விவசாயிகள் வசமிருந்த நிலங்கள் பிறர் வயப்படாது. இவை சம்பந்தமாக முதல் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் முயற்சித்தனர். ஆனால் அவை சம்மந்தமான பயன்கள் ஊக்கமளிப்பனவாயில்லை. மிருக மருத்துவ சாலைகள் வெகுதூரத்திற்கப்பால் ஒவ்வொன்றிருக்கின்றன. கால் நடைகளின் மரண விகிதம் குறைக்கப்படவில்லை இந்நோக்கங்கள் ஈடேறுவதற்குபோதிய பணமவசியம். இந்தப் பிரச்சினைகளைப் பரந்த நோக்கத்துடனும் கையாளுவோமானால் நாட் செல்லச் செல்ல நாம் வெற்றியுறுவதுறுதி.

நம் கட்சியின் பணி.

முடிவு காணப்பட வேண்டிய பிரச்சினைகள் உள என்று நான்குறிப்பிட்டேன். சீர்திருத்தம் வழங்கப்பட்ட பிறகு பொது ஜனங்களின் முன்னேற்றத்திற்கான இத்திட்டங்களை அமுல் நடத்தத்தக்க நிலையில் நம் கட்சியினர் இருப்பார்கள், அவர்கள் முன்னேற்றத்தில் நாம்கொண்டுள்ளஅக்கறை வேறுயாருங்கொள்ளவில்லை. பொது ஜனங்களின் கஷ்டங்கள் இன்னவையென்றும் நம்மைப்போல் வேறுயாரும் உணர்ந்திருக்கமாட்டார்கள். நமது தலைவர்கள் தம்புத்தி கூர்மையினால், பலவித சோதனைகளுக்கு நம்கட்சி உட்படாது எப்போதும் நடத்திவந்திருக்கின்றார்கள். நமது இயக்கத்திலே பணக்காரர்களும், ஏழைகளும், முதலாளிகளும், தொழிலாளிகளும், ஜமீன்தார்களும். குடியானவர்களும், சேர்ந்திருக்கின்றனர். இத்தகைய மாறுபட்ட நோக்க முடையவர்களின் நலன்களை ஒன்றுபடுத்துவதிலும், அவர்களின் பொதுநலன்களை முன்னேறச்செய்வதிலும் பார்ப்பனரல்லாதார் தொண்டுமட்டு மன்றி அவர்களுடைய பலத்திற்கு இது அறிகுறியாகவும் இருக்கின்றது.

எனது வேண்டுகோள்

நண்பர்களே! நமதுகட்சித்தலைவர்களான தியாகராய செட்டியாரும் டாக்டர் நாயரும், பனகால் அரசரும் கொண்டிருந்த நோக்கத்தை நாம் நம் மனத்தில் பதித்துக்கொண்டு அதன்படி ஒழுகுவோமானால், நமக்காக அவர்கள் வகுத்துள்ள நெறிபற்றிச் செல்லுவோமானால், நமது தற்காலச்சாதனங்களை விடுத்து இனிஏற்படப்போகும் தேசிய நிர்மாணத் துறையில் நம்கருத்தைச்செலுத்துவோமானால், நம் நாட்டின் பெரிய மீட்சிக்கட்சியாக நம்கட்சி விளங்கும். நமது நிர்மாணவேலை நாடுமுழுதும் பொலிவுறும். இனிவரப்போகும் சரித்திராசிரியர்கள், நம்தேச சரித்திரத்தைப்பெயர்த்தெழுதும் போது, நமது கட்சி நம்நாட்டிற்காற்றியுள்ளவுதொண்டு, வேறெக்கட்சியும் ஆற்றவில்லை என்று எழுதுவார்கள். இது நான்மிகைப்படக்கூறும் மொழியன்று. உங்களுடைய கூட்டுறவினாலும், பேருக்கத்தினாலும், தெளிந்த தேசபக்தியினாலும், நாட்டின் முன்னேற்றமே நமது லக்ஷியமாகக் கொள்ளுவோம். பொதுஜன நன்மையை நாடுவதே நமதுகொள்கையாகும். இந்தியாவின் பரமஏழையின் நலனைக்கருதி முன்னேறும்படிச் செய்வதே நமது கருத்தாகும். நமதுகட்சியின் பிற்காலவாழ்வைக் குறித்து நான் பெரிதும் நம்பிக்கைகொண்டிருக்கின்றேன். நம்கட்சிபெருகி ஓங்குவது கண்டுநமது கட்சியின் நோக்கங்களையும் கொள்கைகளையும் இதரஅரசியல் கட்சிகளும் பின்பற்றும்படிச் செய்யத்தக்க அத்துணைச்சிறந்த நிலையைநம்கட்சிஎய்துமெனக்கூறுவேன்.

எனக்கு நீங்களளித்த கௌரவம் பற்றிநான் மீண்டும் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். மக்களின் கதியை நிர்ணயிக்கின்றவன் எவனோ, ஏழை பணக்காரன் என்னும் பேதமற்ற நம்மால் வணங்கப்படுகின்றவன் எவனோ, எவனுடைய தீர்க்கஞானத்தில் நாம் பூரணநம்பிக்கை கொண்டிருக்கின்றோமோ, மக்கள் அனைவருக்கும் நீதிசெலுத்துகின்றவன் எவனோ, ஏழைபணக்காரன், உயர்ஜாதி, கீழ்ஜாதி, வெள்ளையன் கருப்பன் யென்ற பேதமற்றவன் எவனோ, அவன் நமது பணிக்குமுன்னின்றுதவி நடத்து விப்பானாக! நமது கடமைகளை நேரியமுறையில் உணர்ந்து கொள்ள நமக்குத்துணைபுரிவானாக! நமது கஷ்டங்களினின்றும் தொல்லைகளினின்றும் நம்மை மீட்பானாக! அவனுடைய அருள்பெற்ற நாம் நம் காரியத்தில் சித்திபெறுவோமாக!

ஹிமகிரி தைலம்.

ஸ்நானத்திற்கு ஏற்றது.

உடம்பையும், கண்களையும், மூளையையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் குளிர்ச்சி செய்கிறது. சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. தலைவலிக்கு சிறந்த மருந்து அபிப்பிராயம்:- ஆர். எஸ். முட்டவீரு பி. இ. எலக்டிரிக்பவர் ஹவுஸ் உதகமண்டலம். கடந்த ஆறுமாத காலமாக தங்கள் தைலத்தை நான் உபயோகிக்கிறேன் எல்லாத்தைலங்களைவிட தங்கள் தைலம் சிறந்து விளங்குவதோடு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரத்தக்கதாயிருக்கிறது. உள்நாட்டு மூலிகைகளைக் கொண்டு செய்யப்பட்ட விலை சகாயமான தைலம் இதுவே. நல்ல பலந்தரக் கூடியதாயிருக்கிறது. பொது ஜனங்களுக்கு இதை சிபார்சு செய்கிறேன்.

விலை 1—0—0, 0—8—0.

ரத்னமிஸ்ரி ஹல்வா.

மூளையையும், உடலையும், பலப்படுத்துவது.

பலவீனம், ஜீரணக்குறைவு, சோம்பல், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றை நீக்கவல்லது. தாதுவிர்த்திக்கேற்றது. விலை 2—8—0, 1—4—0.

நற்சாட்சி பத்திரங்களும், தங்கமெடல்களும் பரிசுபெற்றது.

கிடைக்குமிடம்:—

எம். பெருமாள் நாயடு,
மளிகை ஈரோடு,

மெடிகல் எம்போரியம், ஈரோடு.

சோல் ஏஜண்ட்,
அனந்தகிருஷ்ண பிளவர் மில்ஸ்,
பெங்களூர்சிட்டி.

உதகமண்டலம் ஆதிதிராவிட மகாஜன சபை.

மேற்குறிப்பிட்ட சபையின் ஆதரவில் 2—10—32 ந்தேதி மாலை 3 மணிக்கு ஷை சபையின் உப அக்கிராசனுதிபதியும், முனிசிபல் கவுன்சிலருமான, திரு. எஸ். அப்பாசாமி அவர்களின் தலைமையின் கீழ் ஓர் விசேஷ கூட்டம் காந்தல் கணேசர் ஆலயத்தில் நடைபெற்றது.

அச்சமயம் திரு. அப்பாதுரை பிள்ளை அவர்கள் தலைவரை, மதமும், தீண்டாமையும், என்னும் விஷயத்தைப்பற்றி பேசும்படிக்குக் கேட்டுக்கொண்டபடி தலைவர், மதமே தீண்டாமைக்கு முதல்வாசல் என்னும் பொருள்பற்றி அநேக மேற்கோள்களுடன், கேட்போருள்ளம் ஆனந்த பரவசமடையும்படிக்குசுமார் முக்கால் மணி நேரம் சொற்பொழிவாற்றி முடிவுரை கூறியபின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

—————

திருச்சியில் பொதுக் கூட்டம்

திருச்சி டவுன் ரெயில்வேஸ்டேஷனுக்கருகிலுள்ள சமரச சன்மார்க்க சங்கக்கட்டிடத்தில் 6—10—32ந் தேதி ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்கு திரு. டி. சி. சாமி அவர்கள் தலைமை வகித்தார். அதுபோது காரியதரிசி திரு. டி. எல். சஞ்சீவி அவர்கள் ஆலயப்பிரவேசத்தைப்பற்றியும், திரு. பாலகிருஷ்ணன் குருவாயூர் சத்தியாக்கிரகிகேளப்பனைப் போற்றியும், சமதர்மத்தைப்பற்றியும், எம். நடேசன் அவர்கள் காந்திஅம்பேத்கார் ஒப்பந்தத்தைப்பற்றியும், தொகுதிகளின் விபரங்களைப்பற்றியும், பேசினுர்கள். பின் முக்கியமான தீர்மானங்கள் சில நிறைவேற்றியபின் தலைவர்முடிவுரைக்குப்பின் சமரச சன்மார்க்க சங்கக் காரியதரிசிஅவர்களால் வந்தனுபசாரம் கூறியபின் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்.

—————

பினங்கு இந்து வாலிப சங்கம்.

1—10—32. சனிக்கிழமையன்று சங்க நிலயத்தில் வாராந்திரக்கூட்டம் கூடியது. அவ்வமயம் அநேக அங்கத்தினர்களும் பொது ஜனங்களும் வந்திருந்தனர். தோழர்களான ஏ. கே. முனியாண்டி, எஸ். ஆறுமுகம், ஏ. வீருச்சாமி, எம். முத்துக்கண்ணு, ஆகியவர்களால் இரவு 7 மணியிலிருந்து 8 மணி வரையில் சுயமரியாதை க்கீதங்கள் பாடப்பட்டன. பின்னர் கே. கே. கமலநாதனவர்களைத் தலைமையாகக்கொண்டு, தோழர்களான பி. ஏ. மூர்த்தி அவர்களால் "வாழ்வு" என்பதைப்பற்றியும், ஏ. குப்புசாமி அவர்களால் "சுயமரியாதை இயக்கமும், வைதீகர்களின் மயக்கமும்" என்றும், டி. வி செல்லையா ஆகியவர்களால் "கற்பத்தடையால் மறுபிறப்புண்டா?" என்னும் விஷயம் பற்றி விளக்கமாகவும் வீரமாகவும் சொற்பொழிவாற்றப்பட்டது. பின்னர் தலைவர் முடிவுரையுடன் காரியதரிசியால் வந்தனம் கூறக் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

கொக்கோகம்.

மூலமும் உரையும்-காலிகோபயின்ட்

64 வகை சிற்றின்ப அசல் கிலேஸ் போட்டோ படங்கள். சதிபதிகளும், தனி மாதர்களும் சேர்ந்த தனி கட்டடத்தோடு, விலை ரூ. 5. வெளிநாட்டினர் ரூ. 5—8—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

T. G பாக்கியம் & கோ.,
வேப்பேரி, சென்னை.

எங்கே கிடைக்கும்?

பல மருந்துகளையும் கையாடி பயனடையாமல் இருப்பவர்கள் தக்க மருந்தையறிந்துகொள்ளும் பொருட்டு இதைப்பிரசுரம் செய்திருக்கிறோம்.

எவ்வித வியாதிக்கும் ஏற்றமருந்து பழனி மலையப்பசாமி வைத்தியசாலையில்தான் கிடைக்கும்.

வியாதிவிபரம் எழுதி ஏற்ற மருந்தை அடையுங்கள்! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I

Dr, R. M. Shastry's
Ayurvedic Golden Tonic.

"பல டாக்டர்களின் நன்மதிப்புப்பெற்றது."

(Registered by the Government of India)

உத்திரவாதமுள்ளது உடனே பரீட்சித்துப்பாருங்கள்.

இதை ஆண், பெண், பாலர், விருத்தர் முதல் எல்லாவயதோரும் எவ்வித பத்தியமும், அனுபானமுமின்றி கீழ்க்குறிப்பிட்டரோகங்களால் கஷ்டப்படுகிறவர்களும் அல்லது தேகபலத்தையே விரும்புகிறவர்களும் இதை எந்தக்காலத்திலும் உபயோகிக்கலாம்.

இதனுல்—பாண்டு, காமாலை, உடலில்போதிய ரத்தமின்மை, கை கால் எரிதல், வாய்ப்புண், வாய்நாற்றம், குன்மக்கட்டி, குலைநோய், இருதய அதர்ச்சி, கழுத்திழுப்பு, கைகால் வலி, அல்லது சோர்வு உண்டாதல், மாதவிடாய்காலத்தில் உண்டாகும் தலைவலி, தலைபாரம், தலை மயக்கம், தலை சுற்றல், இடுப்புவலி, மார்புநோய், வயிற்றுவலி, மற்றும் கை கால் மூட்டுகளில் உண்டாகும் வீக்கம் முதலிய பல கஷ்டங்களை நிவர்த்திப்பதில் இது ஒப்பற்ற சஞ்சீவிக்கு ஒப்பானது.

மற்றும்—மூத்திரம் கள்ளைப்போலும், மோரைப்போலும், முறிந்தபால் போலும், பலவித நிறங்களாகவும் அடிக்கடிபோதல் மலபந்தம், மலத்தோடு சீழ் அல்லது இரத்தம் போதல், பலவித சிரங்குகள், உன்மத்தம், சோம்பல் முதலியவற்றை நிவர்த்தித்து இரத்த சுத்தியை உண்டாக்கி தேகத்திற்கு நல்ல பலத்தையும், தேக புஷ்டியையும் தருவதில் நிரம்பவும் அனுபவப்பட்டது.

உண்மையில் நடக்க சக்தியற்றவர்களும் பரீட்சைக்காக இதில் ஒரு புட்டியாகிலும் உபயோகித்துப்பார்ப்பார்களானுல் உண்மையில் அவர்களின் ஊன்றுகோலை வீசியெறிந்துவிட்டு தாமகவே நடக்கச்சக்தி பெறுவர் என்று உறுதியோடு இதை சிபார்சு செய்கிறோம்.

12 அவுன்சு புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0 போஸ்டு சிலவு கட்டுக்கூலி பிரத்தியேகம்.

விலாசம்:— Dr. R. M. Shastry
Post-Rakah Mines
Singhbum Dist. (N. India.)

விற்பனைக்காக நம்மிடம் உள்ள

இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
5. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
6. சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... 0—4—0
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—C
8. மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

3 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 90 சாமான்களும் இனும்.



வாசனையிற் சிறந்தது ஒட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 3 ரூபாய்க்கு 6 பாட்டில்கள் வாங்கு வோருக்கு, கோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மியாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனு 1-ம், இன்னும் 90 சாமான்களும் இனுமாய் கொடுக்கப்படும். இனும் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency
15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.

கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.
இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மைமை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

Goshaye office pillss.

கோஷாயி ஆபீஸ் மாத்திரை

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சாஜ் வேறு.

டாக்டர் T. K. வெங்கடாசலம்,
(காலராபைரி) கோஷாயி வைத்தியசாலை, தேன்னூர், திருச்சி.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

டங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.